www.tamilarangam.net

1997 முதல்

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 32 □ யூன் 07 - ஒக் 07 □ ISSN 1474 - 8770 □ www.thesamnet.com

## தமிழ் தேசியவாதமும் தேசிய சிந்தனையும்




## இலங்கை – இந்திய ஒப்பந்த மாகாண ஆட்சியே சாத்தியம்



## தமிழர் தகவல் நடுவம் யாருக்காக ?

## தமிழரின் ஒற்றைப்



# தமிழர்களின் பார்வைக்கும் மீளாய்வுக்குமான நேரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசியற் தீர்வு

கணக்கிலடங்கா வாக்குறுதிகள்
எச்சரிக்கைகள்
ஆயிரம் பயணங்கள்
சந்திப்புக்கள்
திணறும்படியாய் தீர்வுப்பொதிகள்
விவாதங்கள்
கபடம் புரியாதபடிக்கு அறிக்கைகள்
கவலைகள்
நிதானிக்க சிந்திக்க விடாதபடிக்கு
துரத்தும் குண்டுகளில் மதிப்பிழக்கும்
மனித உயிர்கள்
அழுகுரலும் கண்ணீரும்
குருதியில் கரைந்து போக
அகதியாய் அலைவதும்
மாண்டு போவதுமாய்.........
எனது தேசமே
எப்போது
அமைதியில் உறங்கி
சமாதானத்தில்
விழித்தெழுவாய்?

விஜி


# Scudamores Solicitors

☞ அரசியல் தஞ்ச கோரிக்கை, விசா விண்ணப்பம், நாடு கடத்தல் மற்றும் சகலவிதமான குடிவரவு பிரச்சனைகளில் நீண்டகால அனுபவம் மிக்க சட்ட ஆலோசகர்கள் (Immigration and Asylum )

☞ வீடுகள், வியாபார நிலையங்கள், வாங்க அல்லது விற்க சட்ட உதவி (Conveyancing / Residential and Commercial )

☞ குற்றவியல் ஆலோசனை, பொலிஸ் பிரச்சனைகள் (Criminal Litigation , Police station attendance)

☞ இலவச சட்ட ஆலோசனை (தகுதியானவர்களுக்கு மட்டும்) (Free Legal Help – subjected to merit and means test)

☞ தமிழில் தொடர்புகளுக்கு - ராஜ்

tel : 08448 802 323
fax : 08448 802 322

132 Snakes Lane East
Woodford Green
Essex IG8 7HZ

உள்ளே

01 தேசத்தின் பார்வை: TIC, எங்கே அந்த நடுநிலை

02 TIC, யாருக்காக ?
**த ஜெயபாலன்**

04 தமிழ் தேசியவாதமும் தேசிய சிந்தனையும்
**சபா நாவலன்**

06 தமிழீழப் பயணத்தில் வான் புலிகள்
**முகம்மது எஸ் ஆர் நிஸ்தார்**

10 இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும்
**ரவி சுந்தரலிங்கம்**

**முகம்மது எஸ் ஆர் நிஸ்தார்**

18 இல - இந் ஒப்பந்த மாகாண ஆட்சியே சாத்தியம்
**த ஜெயபாலன்**

20 மரணத்திற்கு முன்னைய வாக்கு மூலம்: நேர்காணல்
**ரீ கொன்ஸ்ரன்ரைன்**

23 தமிழர்களின் பார்வைக்கும் மீளாய்வுக்குமான நேரம்
**பேராசிரியர் ரட்னஜீவன் கூல்**

26 தமிழரின் ஒற்றைப் பரிமாணம்
**பேராசிரியர் ரட்னஜீவன் கூல்**

28 முத்தரப்பு ஒப்பந்தமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு
**ரவி சுந்தரலிங்கம்**

31 ஈபிடிபி பதில்
**எம் வண்ணன்**

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 208 905 0452
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# TIC, எங்கே அந்த நடுநிலை!!!

நடுநிலை என்பது சரிக்கும் பிழைக்கும் இடையே, நீதிக்கும் அநீதிக்கும் இடையே நிற்பது என தமிழ் தலைமைகள் குறிப்பாக விடுதலைப் புலிகள் மிகத் தவறாகவே அதனை புரிந்து வைத்து உள்ளனர். அதனால் தமிழ் மக்கள் நீதியின் பக்கம் நிற்க வேண்டும் அதாவது விடுதலைப் புலிகளின் பக்கம் மட்டுமே நிற்க வேண்டும் என்கின்றனர். அல்லாதோர் எதிரிகள். துரோகிகள். சம்பந்தப்பட்டவர்களின் பக்கம்சாராது விடயத்தை அணுகுவதே நடுநிலை என்பதை இவர்கள் புரிந்துகொள்வதில்லை.

லண்டனில் உள்ள தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் முதல் முல்லைத்தீவில் உள்ள மீனவர் சங்கம் வரை தமிழ் மக்கள் மீதான விடுதலைப் புலிகளின் அதிகாரத்துடனான இந்த ஏகபோக உரிமை, புலியின்றி தமிழ் சமூகத்தில் ஓரணுவும் அசையாது என்ற நிலையை ஏற்படுத்தி உள்ளது. அப்படியில்லாத அமைப்புகள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்கள் வழங்கப்படுகிறது.

இவற்றுக்கு விதிவிலக்காக மட்டுப்படுத்தப்பட்ட சுயாதீனத்துடன் அரசியல் நடுநிலையுடன் நீண்டகாலம் செயற்பட்ட அமைப்பு தமிழர் தகவல் நடுவம் - Tamil Information Centre. விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பு என மேற்குலகில் தடை செய்யப்பட்ட பின் தமிழ் மக்கள் மத்தியில் சுயாதீன அமைப்புகள் இல்லாத வறுமை நிலையை தமிழர் தகவல் நடுவம் ஈடுசெய்தது. சர்வதேச நாடுகளின், மனித உரிமை அமைப்பகளின் மற்றும் நிறுவனங்களின் கொள்கை வகுப்பாளர்களுக்குவிஞ்ஞானபூர்வமான அறிக்கைகளைத்தயாரித்து அளித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு வித்திட்டது. தமிழர் தகவல் நடுவத்தின் அறிக்கைகள் மதிப்பு மிக்கனவாகவும் இருந்தது. காரணம் அதன் சுயாதீனம்.

ஆனால் அண்மைய செயற்பாடுகள் குறிப்பாக தமிழர் தகவல் நடுவத்தால் செப் 29, 2007ல் கூட்டப்பட்ட PUBLIC AWARENESS MEETING, 'Anti-Terrorism Legislation, Public Security and Protection of Civil Liberties' கூட்டம் அதன் நடுநிலையை பாதிக்கும் வகையில் , பெயரை மதிப்பிழக்கச் செய்யும் வகையில் அமைந்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டதால் போராட்டங்களை நடத்துவது, நிதி சேகரிப்பது என புலிகளின் ஆதரவுத்தளம் ஆட்டம் கண்டுள்ளது. இந்நிலையில் புலிகளின் ஆதரவுத் தளத்தை உறுதிப்படுத்துவதே இக்கூட்டத்தின் உள்நோக்கம். இதற்கான ஒழுங்குகள் ஏற்பாடுகள் பெரும்பாலும் புலி முத்திரையை தாங்கியவர்களின் அல்லது அவ்வாறான அமைப்புகளாலேயே மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இதனை தஞ்சம் நிராகரிக்கப்பட்ட அகதிகளுக்கான ஒரு மிக முக்கிய நிகழ்வாகபுலி ஆதரவுஊடகங்கள் பிரச்சாரம்செய்திருந்தமை குறிப்பித்தக்கது. இவ்வாறான நிகழ்வுகளை ஏதாவதொரு தமிழ் அமைப்பின் பெயரில் அல்லது புதிதாக ஒரு சங்கத்தை உருவாக்கி நடத்தியிருக்கலாம். அதற்கு தமிழர் தகவல் நடுவம் எதற்கு. இது Tamil / Tiger Information Centre ? இருக்கின்ற பினாமி அமைப்புகள் போதும் என்றே நினைக்கிறோம். இன்னொன்று அவசியமில்லை. இதனை நடுவத்தின் இயக்குநர்கள் புரிந்துகொள்வார்களா?



TIC தலைவர் வரதகுமார்

த ஜெயபாலன்

# தமிழர் தகவல் நடுவம் யாருக்காக?

PUBLIC AWARENESS MEETING, Anti-Terrorism Legislation, Public Security and Protection of Civil Liberties என்ற தலைப்பில் ஹரோ, Zoroastrian Centre ல் இடம்பெற்ற கூட்டத்தில் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அரசியல் தஞ்சம், குற்றவியல் தடுப்புக்கான புதிய நடவடிக்கைகள், தடுத்து வைக்கப்படுதல், சந்தேக நபர்கள் மீதான பொலிஸ் விசாரணைகள், பயணக் கட்டுப்பாடுகள், கட்டுப்பாட்டுக் கட்டளைகள் மற்றும் இவை தொடர்பான புதிய மாற்றங்கள் பற்றி பேச்சாளர்கள் கருத்துக்களை வெளியிட்டனர். சட்ட வல்லுநர்கள், பிரித்தானிய பிரதான அரசியல் கட்சிகளின் கவுன்சிலர்கள், பொலிஸ் அதிகாரி ஸ்ரீவ் காட்டர், சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் கரத் தோமஸ் ஆகியோர் இந்நிகழ்வில் கருத்தரை வழங்கினர்.

தமிழர் தகவல் நடுவத்தினாலும் விடுதலைப் புலிகளின் ஆதரவு அமைப்புகளினாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டம் அரசியல் தஞ்சம் கோருவோருக்கான முக்கிய கருத்தரங்காக விடுதலைப் புலிகளின் ஆதரவு ஊடகங்களில் பிரச்சாரப்படுத்தப்பட்டு இருந்தது. நிகழ்வுக்கு முதல் நாள் இரவு தீபம் செய்தி அறிக்கையை வாசித்த ஆனந்தராணி பாலேந்திரா, சட்ட நிபுணர் வாசுகியை இந்நிகழ்வு பற்றி வினவிய போது அரசியல் தஞ்சம் பற்றிய மிக முக்கியமான மாநாடு இதுவென்றும், தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் திருப்பி அனுப்பப்படுகையில் தமிழர்கள் போராடாமல் இருந்துவிட மாட்டார்கள் என்பதைக் காட்டுவதற்கான சந்தர்ப்பம் எனவும் ஒரு அரசியல்வாதியைப் போல் உணர்ச்சி பொங்கிடக் கூறினார். சட்ட நிபுணர் வாசுகியுடைய கூற்றுப்படி இந்நிகழ்வு அரசியல் தஞ்சம் பற்றிய வழிப்புணர்வு, போராட்டம் பற்றியதாகவே இருந்தது. அரசியல் தஞ்சம் பற்றிய கேள்விகளுக்கும் அங்கு பதிலளிக்கப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத்தில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கரத்தோமஸ் –படம்– இலங்கையின் வடக்கு – கிழக்கில் மோசமடைந்து வரும் நிலைமைகளையிட்டு தனது கவலையை வெளிப்படுத்தினார். தனது அரசாங்கம் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கைக்கு அழுத்தங்களை வழங்கும் எனவும் தெரிவித்தார். யூத சமூகத்தைச் சேர்ந்த கொன்சவேடிவ் கட்சி கவுன்சிலர் பேசுகையில் அரசாங்கத்தின் அரசியல் தஞ்சக் கொள்கைகளை கடுமையாக விமர்ச்சித்தார். கொன்சவேடிவ் கட்சியும் அரசியல்தஞ்சம் தொடர்பான மிகக் கடுமையான கொள்கைகளையே கொண்டிருந்த போதும் அக்கவுன்சிலரின் உரை கட்சிக் கொள்கையுடன் முரண்பட்டு இருந்தது. அவர் அரசின் போக்கை கடுமையாக விமர்சித்த துடன் சர்வதேச விடுதலைப் போராட்டங்களை மெச்சினார். ஆனால் பாலஸ்தீனிய போராட்டம் பற்றி அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.



அங்கு உரையாற்றிய பொலிஸ் அதிகாரி தமிழ் மக்கள் பயங்கரவாதத்தை ஒழிக்க தமக்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் தகவல்களை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். தகவல் வழங்குவதற்கான தொடர்பு இலக்கங்களையும் சபையினருக்கு வழங்கினார். அவர் தொடர்ந்து பேசுகையில் தமிழ் மக்கள் மத்தியில் கிறடிட்காட் மோசடிகள் அதிகரித்து இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் இவற்றில் ஈடுபடுவதாக தகவல்கள் கிடைத்து உள்ளதாகவும் தெரிவித்தார். அவ்வதிகாரி இக்கூற்றை தெரிவித்ததையடுத்து இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றுது என ஒரு பேப்பர் பத்திரிகையாளர் பாலா குரல் எழுப்பினார். அவரைத் தொடர்ந்து இன்னும் சிலரும் குரல் எழுப்பினர். கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. 'ஒருவர் பேச்சுக்கு இடையே குறுக்கிடுவது தமிழ் பண்பாட்டிற்கு நாகரீகமில்லை. கேள்வி நேரத்தில் கேள்விகளை கேளுங்கள்' என செல்வரூபன் கட்டுப்படுத்த முற்பட்டார். பாலா தொடர்ந்தும் குரல் எழுப்பினார். இறுதியில் சிலர் தலையிட்டு அவரை சாந்தப்படுத்தினர். பேச்சுகளுக்கு இடையே எழுந்து குறுக்கிடும் போக்கு லண்டன் மேடைகளில் புதிதல்ல. இதனைச் சிலர் சுய விளம்பரத்திற்காகவும் செய்வது குறிப்பிடத்தக்கது.

தஞ்சம் கோரியவர்களின் நடவடிக்கைக் குழு சார்பாக செல்வரூபன் பேசுகையில் இன்று பயங்கரவாதிகளாகக் கருதப்படுபவர்கள் நாளைய தலைவர்களாக மதிக்கப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படுவார்கள் என்றும் அன்று பயங்கரவாதியாக கருதப்பட்ட நெல்சன்மண்டேலாவின் உருவச்சிலை பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன் இப்போது திறந்து வைக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டினார். விடுதலைப் புலிகளின் தலைவரையும் நெல்சன்மண்டேலாவையும் ஒன்றாக மதிப்பிட்ட செல்வரூபன் பிரபாகரனின் உருவச்சிலை பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன் திறக்கப்படும் என்ற ஆதங்கத்தை அங்கு நாசுக்காகச் சொல்லிச் சென்றார். இஸ்ரேலை தமிழ் மக்களுக்கு ஓர் உதாரணமாகவும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

அங்கு உரையாற்றிய சட்டவல்லுநர்களில் ஒருவரான அசாத் பிரித்தானிய பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் குறைபாடுகளை மிகத் தெளிவாக முன்வைத்தார். பிரித்தானிய அரசின் பயங்கரவாத முத்திரை என்பது எவ்வாறு காலத்திற்குக் காலம் மாறுபடுகிறது என்பதைச் சுட்டிக்காட்டிய அவர் பிரித்தானிய வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்படுத்தப்படும் மாற்றம் பர்மாவில் ஜனநாயகம் கேட்டுப் போராடும் பௌத்த பிக்குகளை பயங்கரவாதிகள் எனவும் கூறக் கூடிய சூ ழ்நிலை ஏற்பட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை எனத் தெரிவித்தார். இப்பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தால் பிரித்ததனியாவில் உள்ள சிறுபான்மை இனங்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பதையும் அச்சட்ட நிபுணர் விளக்கினார். அவர் மேலும் குறிப்பிடுகையில் நடைமுறைக்கு வரவுள்ள புதிய சட்டவிதிகள் சிறுபான்மைச் சமூகங்களுக்கு பாதகமாகவே இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார். அங்கு இன்னும் பலரும் உரையாற்றினர்.

கேள்வி நேரத்தில் தனது குடும்பத்தை படுகொலை செய்த கருணா இந்நாட்டிற்கு வந்துள்ளதாகவும் அவர் எப்படி இங்கு அனுமதிக்கப்பட்டார் எனவும் கண்ணீருடன் ஒருவர் கேள்வி எழுப்பினார். விடுதலைப் புலிகளுக்கும் கிறடிட்காட் மோசடிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனப் பலரும் அங்கு சுட்டிக்காட்டினர். அங்கு பல்வேறு கேள்விகள் எழுப்பப்பட்டது.

இக்கூட்டம் யாருக்காக கூட்டப்பட்டது என்பதும் எந்த நோக்கத்திற்காக கூட்டப்பட்டது என்பதும் கேள்விக்குரியதாகவே உள்ளது. 70க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் யூலை 9 முதல் நாட்கணக்கில் தடுப்பு முகாம்களில் உண்ணாவிரதம் இருந்த போது இவ்வளவு உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்திக்கொண்டு இவர்கள் எப்படி இருந்தார்களோ தெரியவில்லை. 'உயிர்களைக் காப்பாற்ற உணர்வுடன் எழுவோம்' என அறிக்கைவிட்டு ஓகஸ்ட் 4ல் போராட வரும்படி கேட்ட தஞ்சம் கோரியவர்களின் நடவடிக்கைக் குழு Action Group for Tamil Asylum Seekers - AGTAS, போராட்டத்தை கைவிட்டு மௌனமாகியது. தமிழர் தகவல் நடுவம் பலரின் வற்புறுத்தலால் உண்ணாவிரதிகளுக்காக ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டு தனது கடமையை பூர்த்தி செய்தது.

ஆனால் இவர்எெல்லோரும் திடீரேனப் பொங்கி எழுந்து மீண்டும் அரசியல் தஞ்சம் பற்றி ஆர்ப்பரித்து உள்ளனர். பிரித்தானிய தமிழ் சமூகத்தில் மிகவும் விழிம்பு நிலையில் கையறு நிலையில் உள்ளவர்கள் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள். அவர்களது முதுகில் யாரும் ஏறி என்ன அரசியலும் செய்ய முடியும். செப்ரம்பர் 29, 2007ல் தமிழர் தகவல் நடுவமும் அதில் ஏறி சவாரி செய்துள்ளது என்பது தான் மனவருத்தத்திற்குரியது.

அரசியல் தஞ்ச விடயத்தில் பிரித்தானிய குடிவரவுக் கொள்கை வகுப்பாளர்களிடம் தமிழர் தகவல் நடுவம் நடத்திய போராட்டங்கள், பிரச்சாரங்கள் மிகவும் மதிக்கப்பட வேண்டியது. ஆனால் அதற்காக அரசியல் தஞ்சம் நிராகரிக்கபட்டவர்களின் இயலாமையை வேறு அரசியல் நோக்கங்களுக்காகப் bypass செய்யும் உரிமை தமிழர் தகவல் நடுவத்திற்கு இல்லை.

பிரித்தானியாவில் பயங்கரவாதத் தடுப்பச் சட்டம் 2001ம் ஆண்டே கொண்டு வரப்பட்டுவிட்டது. இச்சட டம் தன்னகத்தே பல மனிதஉரிமை மீறல்களையும் தெளிவின்மையையும் கொண்டிருந்தது. அச்சட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பிருந்தே அதற்கெதிரான போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதும் அது இன்றும் தொடர்வதும் யாவரும் அறிந்ததே. அவை எதிலும் தமிழ் சமூகம் ஈடுபட்டிருக்கவில்லை என்பதும் உண்மை. அதற்கும் அரசியல் தஞ்சத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென வாதிட முடியாது. ஆனால் பிரித்தானியாவில் உள்ள தமிழர்ளையோ, அரசியல் தஞ்சம் கேட்கும் தமிழர்களையோ பயங்கரவாதிகள் என பிரித்தானிய அரசு முத்திரை குத்திவிட்டது என ஏ சி சாந்தனும், அவரது சகாவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும்வரை யாரும் தெரிவிக்கவில்லை.

பிரித்தானியாவின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் நேர்மையான வழிகளில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு ஆள்சேர்ப்பதற்காக அரசியல் தஞ்சத்தை துணைக்கு அழைத்து தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு விணான நம்பிக்கைகளை வழங்குவது ஆரோக்கியமானதல்ல. இது சில சட்ட நிறுவனங்களுக்கு பணம் பண்ணுவதற்கே வழிகோலும். மக்களுக்கு TIC இன் தேவைகள் அதிகம். அவர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். ☑

www.tamilarangam.net

# தமிழ்த் தேசியவாதமும் தேசிய சிந்தனையும்



சபா நாவலன்

அன்று 1970க்களில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய பிரதான கட்சிகளின் கூட்டமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணி, (T.U.L.F.) அடிப்படையில், கொழும்பு சார்ந்த நிலப்பிரபுக்களாலும், தரகு முதலாளித்துவத்திற்குச் சார்பான சக்திகளாலும் தலைமைதாங்கப்பட்டது. தமிழ்த் தேசியவாதத்தின் உச்சநிலையான தமிழீழம் என்ற கோஷத்தை முன்வைத்தது.

1973ம் ஆண்டு நடைபெற்ற TULF இன் 12ஆவது மாநில மகாநாட்டுத் தீர்மானங்கள், அந்நிய மூலதனத்திற்கெதிரான உணர்வை வெளிப்படுத்திய அதே நேரத்தில் சாதீயத்தை ஒழிப்பதற்கு சட்டமியற்றக் கோரியதானது அதன் நிலப்பிரபுத்துவ அமைப்பிற்கெதிரான போக்கையும் வெளிப்படுத்தியது. ஆனால் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோது, தமிழரசுக்கட்சியிலிருந்து வெளியேறிய பலர், பின்னதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேலணிகளில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

மேலும் TULF ஆரம்பத்தில் தமக்கு எதிரான அரசியல் சக்திகளை அழிப்பதற்காக எந்தவித அரசியல் நோக்கமுமற்ற சட்டவிரோத கள்ளக் கடத்தல் தொழிலில் ஈடுபட்டு இருந்த வல்வெட்டித்துறை இளைஞர்களையும், அவர்களுடன் தொடர்புற்றிருந்த ஏனைய பகுதிகளில் இருந்தவர்களையும் பயன்படுத் தியது. இவர்களுள் இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மற்றும் குட்டிமணி போன்றவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் அதன் எதிர்ப்புச் சக்திகளை மிரட்டவும், தேவைப்பட்டால் கொலை செய்யவும் பயன்படுத்தப்பட்ட சிலராகும்.

நாட்டின் தேசிய உற்பத்தி சக்திகளுடன் நேரடியாகப் பிணைக்கப்படாதிருந்த இவர்கள் சார்ந்த, வல்வெட்டித்துறையை அடிப்படையாகக் கொண்ட சமூகமானது, கடத்தல் தொழிலுக்கு எதிராக இலங்கை அரசின் கெடுபிடிகள் அதிகரிக்க, தொழிலற்ற அராஜகவாதிகளாகவும், உதிரிகளாகவும் மாறிய நிலையில் ஏற்கெனவே எழுந்திருந்த ஸ்ரீலங்கா அரசின் இன அடக்குமுறைக்கெதிரான தேசிய போராட்ட வேலைத்திட்டத்தின்கீழ், தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியால் உள்வாங்கப்பட்டனர்.

1980களின் ஆரம்பத்தில், TULF இன் தீவிரமற்ற போக்குடன் முரண்பட்ட இவர்கள், தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) என்ற அமைப்பின் கீழ் தங்கத்துரை என்பவரின் தலைமையில் அமைப்பாகிக் கொண்டனர். குட்டிமணி, மற்றும் தங்கத்துரை ஆகியோர் வழிநடத்த LTTE இன் இன்றைய தலைவர்கள் உட்பட பல இளைஞர்கள் அந்த அமைப்புடன் இணைந்து 1982ம் ஆண்டு நீர்வேலியில் இடம்பெற்ற வங்கிக்கொள்ளை உட்பட பல அரசிற்கெதிரான வன்முறைப் போராட்டங்களை மேற்கொண்டனர்.

இடதுசாரிகள் தேசியவாதத்திற்கு தலைமைதாங்க மறுத்தநிலையில், அது நிலப்பிரபுத்துவ தரகு முதலாளித்துவ சக்திகளின் கரங்களில் அவர்களின் சொந்த வர்க்கநலனுக்காகப் பயன்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும், அதன் தேசியவாதமும் பல போராட்டங்களின் இறுதியில் நிலப்பிரபுக்களின் கைகளில் விழுந்தது. வன்முறைப் போராட்டமும் இதன் தொடர்ச்சியாகவே அமைந்தது.

இதனால் தேசியவாதிகள் மட்டுமல்லாது, நிலப்பிரபுத்துவ கட்டமைப்புக்கு எதிரான கருத்துகளை முன்வைத்தவர்களும், அவர்கள் சார்ந்த அமைப்புகளும், ஜனநாயகவாதிகளும், புத்திஜீவிகளும், மிரட்டப்பட்டும் கொலை செய்யப்பட்டும் அந்நியமாக்கப்பட்டனர். இடதுசாரிக் கருத்துகளை முன்வைத்தவர்கள் மக்கள் விரோதிகளாகச் சித்திரிக்கப்பட்டனர்.

சுந்தரம், மனோமாஸ்டர், போன்ற தேசியவாதிக ளின் கொலைகள் முதல் இறுதியில் ஆயிரக்கணக்கான தேசியப் பற்றுக்கொண்ட இளைஞர்கள் வரை கொலை செய்யப்பட்ட போதும், பாசிசப் போக்குக் கொண்ட தேசவிரோதிகளுக்கு நிலப்பிரபுத்துவ சித்தாந்தத்தால் தலைமை தாங்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம், தேசிய உருவம் கொடுத்தது.

www.tamilarangam.net

நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பையும், தரகு முதலாளித்துவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்திய அமைப்புகள், தேசியவாதத்தையும் தமது சொந்த வர்க்க நலனுக்காகத் தவிர்க்க முடியாதவாறு பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய தேவையின் வெளிப்பாடே TULFஉம் அதன் ஆரம்பகால பாதாள அமைப்புகளாக இருந்து பின்னாளில் தேசிய விடுதலை அமைப்புகளாகத் தம்மைப் பிரகடனப் படுத்திக்கொண்ட TELO, PLOTE, LTTE போன்ற விடுதலை இயக்கங்களாகும்.

இந்த அமைப்புக்களிலிருந்து கொள்கையளவில் வேறுபட்ட, திட்டமிடப்படாத இடதுசாரிக் கோஷ ங்களுடாக தேசியப் போராட்டத்தில் இணைந்த அமைப்புக்கள் EPRLF மற்றும் EROS ஆகியனவாகும். இந்த அமைப்புகளில் பரந்து கிடந்த இடதுசாரிகளும், தேசியவாதிகளும், தேசப்பற்றாளர்களும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும், நம்பிக்கைதரும் கருத்துகளை முன்வைத்ததுடன் அதற்கான போராட்டங்களையும் முன்னெடுக்கத் தலைப்பட்டனர்.

1983 இனக்கலவரம் எல்லா அமைப்புகளுமே வீங்கிப் பெருக்க வழிவகுத்தது. இந்திய அரசின் இராணுவ, பொருளாதார உதவியினால் ஏற்பட்ட இந்த வீக்கமானது, தேசவிடுதலை இயக்கங்களுக்கு உள்ளேயே ஜனநாயக சக்திகளின் குரல்வளையை நசித்து, மொத்த தேச விடுதலைப் போராட்டத்தையும் பாசிசமயமாக்கியது.

தவிர, ஒப்பீட்டளவில் முற்போக்கான தேசியவாதக் கருத்துக்களை முன்வைத்த மாவேயிஸ விடுதலை இயக்கங்களான தமிழ் தேசிய விடுதலை முன்னணி (NLFT), தமிழ் மக்கள் விடுதலை முன்னணி (PLFT), தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை (TMPP) போன்ற அமைப்புக்கள் படிப்படியாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டன. 1985ம் ஆண்டு TELO இயக்கம் LTTEஇனால் நிர்மூலமாக்கப்பட்டது

1986ம் ஆண்டு இறுதிப் பகுதியில் EPRLF அழிக்கப்பட்ட பின்னர் EROS அமைப்பு LTTE உடன் சங்கமமானதைத் தொடர்ந்து LTTE தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாகத் தம்மைப் பிரகடனப்படுத்தியது. பின்னர் தமிழ் மக்களின் அடக்குமுறைக்கெதிரான தேச விடுதலைப் போராட்டம் எந்த நம்பிக்கையுமற்று படிப்படியாகச் சீரழிக்கப்பட்டது.

இன்று பௌத்த சிங்கள அடிப்படைவாதத்தை ஆதாரமாகக் கொண்ட சிங்கள ஆட்சியாளர்களுக்கும், இதற்கெதிராக இந்தத் தமிழ் அடிப்படைவாதத்தை முன்வைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் வர்க்கசார்பு நிலையில் எந்த முரண்பாடும் இருக்க வில்லை.

1990ம் ஆண்டுப் பகுதியில் இந்திய இராணுவ த்தை வெளியேற்றுவதற்காக, இலங்கை அரசே விடுதலைப் புலிகளுக்கு ஆயுதமும் பண உதவியும், வழங்கியது. மேலும் இலங்கை ஆட்சியாளர்கள் பல சந்தர்ப்பங்களில் LTTEஇற்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்கியுள்ளனர். அடிப்படையில் முரண்பாடுகளைக் கொண்ட எந்த அமைப்பு மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களும் பரஸ்பர உதவிகளை வழங்கிக்கொள்வதில்லை. இது இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எவ்வித வர்க்க முரண்பாடுகளும் இல்லை என்பதையே காட்டுகிறது.

Victor Ostrovsky என்பவர் இஸ்ரேல் உளவு ஸ்தாபனமான Mossad இலிருந்து வெளியேறிய அதன் முக்கியஸ்தர் ஒருவர் எழுதிய By way of Deception என்ற நூலில், தமிழ் சுதந்திரப் போராளிகளுக்கும், அரச படைகளுக்கும் ஒரே நேரத்தில் இஸ்ரேல் உளவு ஸ்தாபனத்தால் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளமையானது, எந்த ஏகாதிபத்திய சார்பு நாடும், விடுதலை புலிகளால் தலைமை தாங்கப்படும் போராட்டத்தை தமக்கு எதிரான போராட்டமாகக் கருதவில்லை என்பது தெளிவாகின்றது.

இறுதியில், தம்மை தமிழ் தேசியவாதிகளாகக் காட்டிக்கொண்டே மக்கள் மத்தியில் தேச விடுதலைப் போராட்டத்தின் மீதான வெறுப்பை ஏற்படுத்திய விடுதலைப் புலிகளும் அதன் ஆதரவு சக்திகளும் தெற்காசிய நாடுகளின் அந்நிய மூலதனத்திற்கு எதிரான தேசியப் போராட்டங்களுக்கும் அச்சுறுத்த லாகத் திகழ்கின்றனர்.

ஒரு புறத்தில் ஸ்ரீலங்கா பேரினவாத, நிலப்பிரபுத்துவ, தரகு முதலாளித்துவ அரச இயந்திரத்தாலும், மறுபுறத்தில் தமிழ் தேசிய வெறியை முன்நிறுத்தும் ஏகாதிபத்திய சார்பு நிலப்பிரபுத்துவ தலைமையான தமிழீழ விடுதலைப் புலிகளாலும், மொத்த இலங்கையினதும் தேசிய பொருளாதார வளர்ச்சியும், தமிழர்களின் நியாயமான தேச விடுதலைப் போராட்டமும் சீர்குலைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தெற்காசிய நாடுகளின் சமூகப் பொருளாதார விடுதலைக்கே பாதகமான இந்த குழப்பகரமான அரசியல் சூழலை, காலனி ஆதிக்கத்திற்குப் பின்னால் ஏற்படுத்துவதில் ஏகாதிபத்திய நாடுகள் வெற்றிபெற்றுள்ளன.

இந்தச் சிக்கலான. குழப்பகரமான, திட்டமிட்ட அழிப்பின் அடிப்படைகள் இருந்தவாறே பேணப் பட, அதற்கு புதிய முரட்டுத்தனமான மறு ஒழுங்கு படுத்தப்பட்ட செயல்வடிவம் தான் உலகமயமாதல் அல்லது சர்வதேசியமயமாதல் (Globalisation) என்ற அழைக்கப்படும் அண்மைக்கால சமூக ஒழுங்கு அமைப்பாகும். ☑

தேசம் சஞ்சிகையின் வெளியீடாக வர உள்ள தமிழ் தேசியம் பற்றிய நூலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முஹம்மது எஸ்.ஆர். நிஸ்த்தார்

# தமிழீழப் பயணத்தில் வான்புலிகள்



ஊடகத்துறையில் உள்ளோர் தமக்குரிய பாரிய பொறுப்புக்களைப் புறந்தள்ளி வெறும் உணர்ச்சிப் பெருக்குடன் வாசகர்களை அணுகும் போது தமது அரசியல் அறிவுக்காகவும், விளக்கங்களுக்காகவும் தமிழ் ஊடகங்களை மாத்திரம் நம்பி இருப்போரை நடைமுறை உலகில் இருந்து வெளியேற்றி கனவுலகில் சஞ்சரிக்கச் செய்துவிடும் அபாயம் உண்டு. அதனையே பெரும்பாலான தமிழ் ஊடகங்கள் செய்து வருகின்றன. புலிகளின் குரலுக்கு அத்தேவை உள்ளது. அது ஒரு இயக்கத்தின் ஊடகம் என்ற வகையில் அதற்கு அவ்வியக்கத்தின் நலன் முக்கியமானது. ஆனால் ஏனைய ஊடகங்களும் போட்டி போட்டுக்கொண்டு புலி வாலைப் பிடிக்க இந்தக் கனவுக்கோட்டையை கட்டுவது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமானதாக இல்லை.

இவ்வாண்டு மார்ச் 26ல் விடுதலைப் புலிகள் நடத்திய வான் தாக்குதல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு புதிய பரிமாணமாக பார்க்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலும் இரு வான் தாக்குதல்களை வான் புலிகள் வெற்றிகரமாகவே நிறைவேற்றியது அதற்கு வலுச் சேர்ப்பதாகவும் இருந்தது. இச்செய்திகள் தமிழ் ஊடகங்கள் அனைத்திலும் முக்கிய இடம்பிடித்திருந்தன. அந்தளவுக்கு ஒரு முக்கியமான விடயம் தான் அது. செய்திகள் தந்த விடுதலைப் புலிகளின் பிரச்சார ஊடகங்கள் சந்தோஷத்தின் உச்சியில் நின்றதை அவதானிக்க முடிந்தது. அது ஏற்றுக்கொள்ளக்கூடிய இயற்கையான உணர்வலைகளின் வெளிப்பாடு.

தொழில்நுட்பம் அதிஉச்சத்தில் முன்னேறியுள்ள இந்தக் காலத்தில் உலகம் கணனிமயப்படுத்தப்பட்டு உள்ள சமகாலத்தில் விடுதலைப் புலிகளால் செய்ய முடியாதென்று நினைத்திருந்த காரியத்தை அவர்கள் சாதித்து முடித்திருப்பதாக இந்தத் தமிழ் ஊடகங்கள் பெருமைப்படுத்துவது விடுதலைப் புலிகளின் தொழில் நுட்பத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகவே உள்ளது.

தமிழ் மக்களின் இனவிடுதலையில் அக்கறைகொண்ட எவர் மனசிலும் சாதாரணமாக எழும் கேள்வி விடுதலைப் புலிகளின் வான்படையணி தமிழீழம் நோக்கிய பயணத்தில் எந்தளவு நேர்விளைவினை (advantage) ஏற்படுத்தும் என்பதாகவே அமையமுடியும். அதனை இந்தத் தமிழ் ஊடகங்கள் பெரும்பாலும் கேட்கத் தவறி உள்ளன. அல்லது கேட்டிருந்தாலும் தமது மனதுக்கு நிறைவைத் தரும் பதில்களை அதற்குத் தேடிக்கொண்டன.


1995இல் இலங்கை அரசின் அவ்ரோ (Avro) விமானம் யாழ் மண்ணில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது அந்த விமானத்தின் சிதைந்த பாகங்களுக்குப் பக்கத்தில் நின்று ஒரு சாதாரண தமிழ்க் குடிமகன் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டி கொடுத்திருந்ததை ஜேர்மன் தொலைக்காட்சிச் செய்தியில் பார்க்கக் கூடியதாக இருந்தது. அப்போது அந்தத் தமிழ்மகன் "எங்கடை பெடியள் இவ்வளவு நாளாய் தரையிலும் கடலிலும் இலங்கை அரசுக்கு சோதனையா இருந்திச்சினம். இனி ஆகாயத்திலும் அவர்களுக்கு ஈடுகொடுக்க வெளிக்கிட்டிட்டினம். இனி எங்களுக்குப் பயமில்லை. எங்களைப் பாதுகாக்க பெடியள் இருக்கினம்" என்றார்.

ஆனால் பிற்காலத்தில் இலங்கை அரசு மிக், கிபீர் போர்விமானக் கொள்வனவில் ஈடுபட்டது. தமிழினத்துக்கு எதிராக அவற்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாராளமாகப் பயன்படுத்தியது. கடந்த 12 வருடங்களாக ஆயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள், பல புலிகள் கொன்று குவிக்கப்பட்டதும், அங்கவீனர்களாக்கப்பட்டதும், மறக்க முடியாத உண்மைகள்.

விடுதலைப் புலிகளின் வான்புலி அணியைக் கண்டு இலங்கை அரசு தமது விமானக் குண்டு வீச்சுகளை நிறுத்தப் போவதுமில்லை. விமானப்படையை கலைத்துவிடப் போவதுமில்லை. மாறாக வான்படையை நவீனமயப்படுத்தவே முயல்வார்கள். முல்லைத்தீவில், ஆனையிறவில் பாரிய அழிவைச் சந்தித்த இலங்கை இராணுவம் சோர்ந்து விடவில்லை. பாரிய கடல் சண்டை தோல்விகளுக்குப் பின்னால் கூட மீண்டும் மீண்டும் தன்னை சுதாகரித்துக் கொண்டே செல்கிறது இலங்கைக் கடற்படை.

ஆக, விடுதலைப் புலிகள் வான்படையணி ஒன்றையும் வைத்துள்ளார்கள் என்ற சந்தோஷத்துக்கப்பால் அது தமிழர்களுக்கு நிலையான, நிறைவான ஒரு பாதுகாப்பைத் தருமென்றோ, அல்லது இனி இலங்கை அரசைப் பணியவைத்து விடலாமென்றோ கற்பனையை வாசகரிடையே பரப்புவோமேயானால், தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டம் நடைமுறை யதார்த்தத்தை மறுதலிப்பதாகவே இருக்கும்.

நம்மளவில் விடுதலைப் புலிகள் சுதந்திரப் போராளிகள். கொரில்லா முறைப் போராட்டத்தில் இருந்து அரை மரபுவழி (Quasi-conventional) படைகளாக பரிணமித்து உள்ளவர்கள். ஆனாலும் விடுதலைப் புலிகளின் இராணுவ செயற்பாட்டிலிருந்தும், தந்திரோபாய அணுகுமுறைகளிலிருந்தும், இதைவிட குறிப்பாக தற்கொலை நடவடிக்கைகள் தொடர்பாகவும், உலக அரங்கில் இன்றும் அவர்கள் முன்னேறிய பயங்கரவாத இயக்கமாகவே பார்க்கப்படுகின்றனர். எனவே விடுதலைப் புலிகள் முற்றும் முழுதாக மரபுவழி படையமைப்புகளைக் கொண்ட இறைமையுள்ள ஒரு நாட்டின் படையமைப்புப் போல செயற்பட முடியாது.

இலங்கை அரசின் விமானக் குண்டுவீச்சுகள் பொதுமக்களையும் பலி கொண்டுள்ளது; "இது விடுதலைப் புலிகளிடமிருந்து பொதுமக்களை காப்பாற்ற எடுக்கும் முயற்சி. விடுதலைப் புலிகள் பொதுமக்களைக் கேடயமாகப் பாவிக்கிறார்கள் இதைத் தடுக்கும் முயற்சியே இது. எனவே எம்மீது விரல் சுட்டுவதை நிறுத்துங்கள்" என்பது அரசின் பிரச்சாரமாக உள்ளது. சர்வதேச சமூகம் கூட இந்தப் பொய்யுரைகளையும் அது அப்படித்தான் (அரசு சொல்வது போல்தான்) என ஏற்றுக்கொள்கின்றது. ஏனெனில் ஈராக்கிலும் அப்கானிஸ்தானிலும் அமெரிக்க வல்லரசு இதையே செய்கின்றது.

இதேபோல் சென்ற வருடம் பெய்ரூட் நகரில் பொழியப்பட்ட குண்டுமாரி, கடத்தப்பட்ட இரண்டு இஸ்ரேலிய இராணுவச் சிப்பாய்களை விடுவிப்பதற்காகவல்ல, மாறாக ஹிஸ்புல்லா இயக்கத்திற்கு ஆதரவு தரும் பொதுமக்களை துடைத்தெறியவே. இந்தத் தாக்குதல்களுக்கு வழங்கப்பட்ட பெயர் 'பூமியிலிருந்து பயங்கர வாதிகளை துடைத்தொழித்தல்' (wiping the terrorist out of the planet). இது 11.09.2001க்குப் பின்னான புதிய உலக அரசியல் ஒழுங்கு. இது நின்று நிதானித்து செயற்படவேண்டிய இடம்.

திறமையும் பெருமளவு அதிர்ஷ்டமும் சேர்ந்த புலிகளின் வான் தாக்குதல்கள் எதிர்காலத்தில் தொடர்ச்சியாக நடைபெறுவதற்கான சாத்தியம் அனேகமாக இல்லை. இதன் அர்த்தம் விடுதலைப் புலிகளால் இன்னொரு வான் தாக்குதலை வெற்றிகரமாக நடத்த முடியாது என்பதல்ல. அவ்வாறான தாக்குதல்கள் இலங்கை அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்த உதவாது.

ஒப்பீட்டுரீதியில் இலங்கை அரசின் விமானப்படை வான் புலிகளைவிட மிகப்பெரியது. பலம் வாய்ந்தது. நவீனமயமானது. தேவையான அளவு விமான ஓட்டிகளையும் கொண்டது. இழக்கும் விமாங்களை ஈடுசெய்ய வெளிநாடுகள் தயார்நிலையில் உள்ளன. இத்தகைய வசதி வாய்ப்புகள் விடுதலைப் புலிகளிடம் இருக்க நியாயமில்லை. தங்களிடம் இருக்கும் விமானங்கள், தளபாடங்கள், தரிப்பு நிலையங்கள் (Hangar)கூட இலங்கை அரசின் ஆளில்லாத உளவு விமானங்களின் கண்காணிப்பில் படாமல் மறைத்து வைக்கப்பட வேண்டிய நிலை. ஆகவே மரபுவழி வான் சமருக்கு விடுதலைப் புலிகள் இன்னும் தயார் நிலையில் இல்லை. இதையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

கடந்த 25 வருட காலத்தில் இருதரப்புகளும் மாறி மாறி ஒருவரை ஒருவர் வெற்றிகொண்டு நிலப்பரப்புகளை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்பது உண்மையென்றாலும் வெற்றிகொண்ட பிரதேசங்களை தொடர்ச்சியாகத் தம்வசம் வைத்துக்கொள்ளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்தியில்லை என்பதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை. அண்மையில் கடற் பரப்பிலும் விடுதலைப் புலிகள் பின்னடைவுகளைச் சந்தித்து உள்ளனர்.

இலங்கை அரசின் விமானப்படை நடத்தும் பொது மக்கள் மீதான வான் தாக்குதல்களைப் போல விடுதலைப் புலிகள் பொரளைச் சந்தியிலோ அல்லது கொழும்புக் கோட்டையிலோ நடத்த முடியுமா? தர்க்கரீதியில் இது முடியாத காரியமல்ல. எண்ணெய்க் களஞ்சியங்களின் மீதான மூன்றாவது வான் புலிகள் தாக்குதல் இது முடியும் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றது. ஆனால் அனுராதபுர பஸ், தலதா மாளிகை, மத்திய வங்கி குண்டுவைப்புகளில் விடுதலைப் புலிகள் பொதுமக்களை குறிவைத்திருந்தாலும் பொதுமக்கள் மீதான வான் தாக்குதல்கள் ஏற்கனவே சர்வதேசத்தில் இருந்து தனிமைப்பட்டுள்ள அவர்களை மேலும் தனிமைப்படுத்தும். மேலும் அவ்வாறான வான் தாக்குதலை இலங்கையின் 9/11 என அரசு பிரச்சாரப்படுத்தி சர்வதேச அனுதாபத்தை வென்றெடுக்கும். முற்றிலும் கையறு நிலையிலேயே அவ்வாறான ஒரு தாக்குதலை விடுதலைப் புலிகள் மேற்கொள்ள முனைவார்கள்.


மறுபுறத்தில் இந்தத் தொடரும் வான்புலித் தாக்குதல் சர்வதேச ரீதியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது என்பதிலும் விடுதலைப் புலிகளின் வான்படையின் தமிழீழத்துக்கான பங்களிப்பு தங்கி உள்ளது. “விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலானது தெற்காசியாவில் மாத்திர மல்லாமல் உலகமட்டத்திலேயே ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படும். உலகின் ஏனைய பயங்கரவாத அமைப்புகளும் பின்பற்றலாம் என்று அஞ்சப்படுவதால் இது உலக மட்டத்தில் பெரும் கவலையை ஏற்படுத்தும். இது தொடர்பாக இந்திய அரசாங்க மட்டத்திலும் கவலைகள் அதிகரிக்கும். ஆயினும் இந்தியத் தரப்பால் உடனடியாக இது தொடர்பாக நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாது." என பாதுகாப்புத் துறை ஆய்வாளர் பி. ராமன் கருத்து வெளியிட்டிருந்தார்.

வான் புலிகள் ஒரு போதும் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையப்போவதில்லை என்றும் வாதிடலாம். காரணம் அணுவாயுத பலம் கொண்ட சீனாவுக்கும், பாக்கிஸ்தானுக்கும் இந்தியா பயங்கொள்ளாத போது, இந்த நாடுகளின் அணு ஆயுத தாக்குதலுக்கு அதை எதிர்கொள்ள முழு அளவில் தயார் நிலையில் அதற்கான சகல சக்திகளையும் பெற்றுள்ளபோது இது எப்படிச் சாத்தியமாகும் எனக் கேள்வி எழுப்பப்படுகின்றது.

இன்று தன்னந் தனியாக நின்று முழு உலகத்தையும் இராணுவரீதியில் எதிர்கொள்ளக்கூடிய வல்லமையுள்ள, இராணுவ போர்த் தளபாட கண்டுபிடிப்பிலும், உற்பத்தி யிலும் மிக முன்னேறியுள்ள அமெரிக்கா அல்-கயிடா பயங்கரவாத இயக்கத்துக்கு எவ்வாறு பயந்துள்ளதோ, ஐரோப்பிய நாடுகளுக்கு இவர்கள் எப்படி ஒரு தலையிடியாக மாறிவிட்டார்களோ, அதே நிலைதான் விடுதலைப் புலிகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு. பயங்கரவாதிகள் என்ன உருவில் எப்போது எங்கு ஏன் வெளிக்கிடுவர் என்பது நவீன தொழில்நுட்பத்தால் முன் அறிந்துகொள்ள முடியாத விடயம்.

அது மாத்திரமல்ல அல்-கயிடா அணு ஆயுதங்க ளையும் தங்கள் மீது பாவிக்கலாம் என்ற சந்தேகம் அல்லது சாத்தியப்பாடு அமெரிக்க அரசை கதிகலங்கச் செய்துள்ளது போல், இந்திய அரசினால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கமொன்று வான்படை வைத்திருப்பதும், இந்தியாவின் கிழக்கிலும் தெற்கிலும் உள்ள அணு ஆயுத கேந்திர இடங்களுக்கு சாத்தியமான ஆபத்துள்ளதா அதற்கான வல்லமை புலிகளிடம் உள்ளதா என்பது தான் இந்தியாவின் முக்கிய கேள்வியாகவும் பிரச்சினையாகவும் இருக்குமே ஒழிய அப்படியான நோக்கம் இப்போது விடுதலைப் புலிகளிடம் உள்ளதா இல்லையா என்பதல்ல.

ஏனெனில் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கை வந்தபோது, அதை தமிழரை அழிக்கவந்த படையாக யாரும் கருதவில்லை. சூழ்நிலையே அவ்வாறு மாற்றியது. அதேபோல் வான் புலிகள் இந்தியாவை அச்சுறுத்த அமைக்கப்பட வில்லை என்பது உண்மையாயினும் புறச்சூழல் இதை இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக மாற்றும் வாய்ப்புள்ளது என்பது இந்தியாவின் நிலைப்பாடு. எனவே இதை முளையிலேயே கிள்ளியெறிய, இதை இலங்கை அரசினூடாகச் செய்ய இந்தியா சகல முயற்சிகளையும் செய்யும் என்பதும் வெள்ளிடைமலை.



விடுதலைப் புலிகளின் வான் புலித் தாக்குதல்களை உலக நாடுகள் வெளிப்படையாகக் கண்டிக்கவில்லை என்பது நிபந்தனையுடன் கூடிய மௌனமே ஒழிய அதை ஒரு மௌனம் சம்மதமாக கொள்வோமானால் நாம் ஏணியும் பாம்பும் விளையாட்டின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சதுரம் ஒன்றிற்கே மீண்டும் வந்து விட்டதாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் உலகப் பார்வையில் பயங்கரவாத இயக்கமொன்று இப்போது விமானப்படை, நாளை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை, மறுநாள் அணு ஆயுத பாவிப்புத்திறன் என்று பட்டியல் நீளும் என்பதோடு உலகளாவியரீதியில் இந்த ஜனநாயக (என்று சொல்லப்படும்) அரசுகள் உலக பயங்கரவாதத்திற்கு எதிரான நேரடி, மறைமுகப் போரொன்றை 11.09.2001இல் ஏற்படுத்திவிட்டனர் என்பதும் நாம் அறியாத விடயங்கள் இல்லை.

எனவேதான் இன்றைய சூழ்நிலையில் வான் புலிகள் தமிழீழம் நோக்கிய பயணத்தில் ஒரு மைல் கல்லானாலும் அதனால் மாத்திரம் தமிழீழம் பெற்றுத்தர முடியாது என்பது எனது நிலைப்பாடு.

இன்றைய சூழ்நிலையில் இலங்கையின் அனைத்து இன மக்களும் தமிழரின் நியாயமான சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுள்ளதாகவே தெரிகின்றது. பேரினவாதத்துடன் அரசியல் நடத்துபவர்களைத் தவிர நாட்டின் பெரும்பான்மை மக்கள் இத்தகைய ஒரு முடிவுக்கு வந்துள்ளனர். அதிலும் குறிப்பாக சிங்கள புத்திஜீவிகள் எப்போதோ தமிழரின் சுயாட்சிக் கோட்பாட்டை விடுதலைப் புலிகளின் மாதிரியாக இல்லாவிடினும் ஏற்றுக் கொண்டுவிட்டனர்.

எனவே விடுதலைப் புலிகள் கூறும் பேச்சுவார்த்தை மூலமான சுயாட்சிப் பிரதேசமும், அரசாங்கம் கூறும் பேச்சுவார்த்தை மூலமான சுயாட்சிப் பிரதேசமும், சர்வதேசம் கூறும் பேச்சுவார்த்தை மூலமான சுயாட்சிப் பிரதேசமும் விட்டுக்கொடுப்புகள் மூலம் மக்களின் நலனை முன்னிறுத்தி தீர்க்கப்பட வேண்டும். அப்படித் தீர்க்கப்படும் போதே குறைந்தபட்சம் மட்டுப்படுத்தப்பட்ட சுயாட்சிப் பிரதேசத்துக்கான இறைமையாகிலும் தமிழர்கையில் வரும். இறைமையுடன் கூடிய பிரதேசம் இன்று மட்டுப்படுத்தப்பட்டு சிறியதாக இருப்பினும் அது தமிழீழம் என்ற பரந்த பரப்பை என்றோ ஒரு நாள் அடைய வழிசமைக்கும்.

மாறாக, தமிழீழம் என்ற ஒரு இறைமையற்ற பிரதேசம் விடுதலைப் புலிகளின் கையில் உள்ளது என்பதற்காக அதற்கான இறைமையைப் பறித்தெடுக்க முடியாது. அப்படி முடியாதபடி இன்றைய பிராந்திய சர்வதேச அரசியல் நிலைமை உள்ளது. சர்வதேச தலையீடு காரணமாக விடுதலைப் புலிகளினதும் சிங்கள பேரினவாதத்தினதும் இரு எதிரெதிர் தீவிர முனைப்பு நிச்சயம் மாறும். அது சகல இன மக்களையும் திருப்திப்படுத்துமாயின் அதுவே இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக அமையும். இது காலத்தின் கட்டாயம். ☑

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

Rengan N Devarajan

SOLICITORS

Immigration & Nationality

Employment

Land Lord & Tenant

Housing

Welfare Benefits

Matrimonial

1ST Floor
128 Ilford Lane, Ilford
Essex, IG1 2LE


Tel : 020 8478 5797
Fax : 020 8478 4486



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும் (2)



ரவி சுந்தரலிங்கம்

# வடக்கு - கிழக்கில் இன உறவுகளின் எதிர்காலம்

மக்கள் கூட்டங்களின் உறவுகளை வெறும் இராணுவக் குழுக்களும், அரசியல்வாதிகளும் மட்டும் நிர்ணையம் செய்வதல்ல. அவற்றையும் மீறிய காரணிகளும் உண்டு.

### அகக் காரணிகள்:

1. மக்கள் தொகை.
2. மக்களுள் சமூக விகிதாசாரங்கள்.
3. மக்களிடையேயான ஸ்தாபனங்கள், அவற்றுடனான உற்பத்தி, மற்றும் உறவுகள்.
4. மக்களது தொழிற்திறன்களின் தராதரம் (skill levels).
5. மக்கள் வாழும் பகுதிகளின் வளங்கள், மூலதனம்.
6. மக்களிடையேயான சமூக - ஒழுக்கம் (social order), சமாதானம்.

### புறக் காரணிகள்:

1. அண்டிய தேசங்கள் சமூகங்களுடனான உறவுகள்.
2. அவற்றுடன் பொதுவான வளங்களை பகிர்ந்து கொள்ளும், பரிமாறிக் கொள்ளும் உடன்பாடுகள்.
3. பிராந்திய உலகளாவிய மூலதன (capital), உழைப்பு (labour) பற்றிய உறவுகள்.
4. உலகளாவிய உற்பத்தியில் பங்கு, உள்வரவு - உற்பத்தி என்பவற்றிடையேயான விகிதாசாரம்.
5. புலம் பெயர்ந்து சமூகங்களாக வாழ்வோரது பங்கு.

எமைப் பொறுத்தவரை, இலங்கையிலுள்ள சர்ச்சைகளுள் முதன்மைப்படுவது, மொழிவாரியான இனப்பிரச்சனை. இந்தப் பிரச்சனையை சிங்கள் அரசு இறுதி விழிம்புவரை கொண்டு செல்வதற்கான காரணம், இத்துடன் இலங்கைத் தீவின் உடமை பற்றிய சர்ச்சைகளுக்கு இறுதி முடிவு காண்பது என்ற திடமான முடிவாகும். இம் முடிவு நிவர்த்தியாகுமா என்ற கேள்விக்கான பதில் இருகட்டமானது.

முதலில் அது இன்றை போரின் விளைவுகளில் தங்கியது. சரித்திர ரீதியில் பார்ப்பவர்கள், இன்று தமிழ் பேசும் மக்கள் பல லட்சமாக வெளியேறிய போதிலும், சிங்களம் - தமிழ் பேசுவோர் என்ற விகிதாசாரம் தமிழ் பேசுவோர் சார்பில் கூடுதலாகவே உள்ளது என்பதை கவனிப்பர். உள்நாட்டுப் போர் என்பதன் அதிரடி விளைவுகள், சமாதானம் என்ற நீண்ட காலத்துள் அகப்படுமாகின் தாக்கப்பட்டோரது பிறப்பு விகிதாசாரம் சாதாரண நிலமைகளைவிட கூடுதலாகவே இருப்பது வழமை. எனவே, ஒருகாலத்தில் இளைய பருவ வயதில் உள்ளவரது விகிதமும் கூடுதலாகவே இருக்க முடியும். இதற்கு பல சமூக - மனோவியல் காரணிகள் உள்ளன. எனவே, தமிழ் பேசும் சமூக மக்களின் தொகையை குறைப்பதனால் அவர்களது வலிமையை இழக்கச் செய்திடலாம் என கணக்கிடுபவர்கள் தவறு விடுபவர் ஆகுவர்.


தமிழ் பேசுவோரை அவர்களது பூர்வீகப் பிரதேசங்களிலிருந்து அப்புறப்படுத்திவிட்டால் வலு விழக்கச் செய்திடலாம் எனக் கணக்கிடுவதும் தவறு. தமிழ் பேசும் மக்களது புலம் பெயரலால் மத்தியதர வர்க்கங்களின் பெரும்பகுதி வெளியேறி விட்டது. ஏனையோர் பெரும்பாலும் குடியான சமூக நிலைப்பாடுகளுள்ளேயே வாழ்கிறார்கள். இவர்களது பொருளாதாரம் என்பது பாரியளவில் சீர் குலைந்ததாகவும், இவர்களது தொழிலியல் - இயல்புகள் (labour-skills) மிகவும் அடிப்படையானதகவுமே உள்ளது. மேலும், வெறும் உள்நாட்டு அகதிகளாகவே தமது ஓரிரு தலைமுறைகளைக் வாழ்ந்திடும் மக்கள் கூட்டமும் இவர்களிடையே உண்டு. இவர்கள் வெளிநாட்டு அரச சார்பிலா அமைப்புகளிடம் (NGOs) கையேந்தி வாழ்ந்திடும் நிலவரத்துக்குள் தள்ளப்பட்டு உள்ளதையும் அதிலேயே நிலைத்திடக்கூடிய நிலைமையையும் காணக் கூடியதாக உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*சிங்கள - அரசும் அதனது அரசாங்கங்களும் செய்யும் ஒடுக்கு முறைகளும், புலிகளது சரித்திரத் தவறுகளும் தமிழ் பேசும் மக்களது தமிழ் மொழியுடனான ஈடுபாட்டை இன்னமும் இறுக்கமாக்ககவே செய்கிறது எனக் கணிப்பதும் தவறல்ல.*



புத்தளத்துக்கு நாடு கடத்தப்பட்ட இஸ்லாமியத் தமிழர்களாயினும், வன்முறைகளைத் தவிர்த்திட கொழும்பையும் அதைச் சுற்றியும் வாழும் வடக்கு கிழக்கு தமிழர்களாயினும், மலையகத்திலிருந்து குடி பெயர்ந்த தமிழர்களாயினும், நிலையில்லாத மனிதர்களாகவும் தளமற்ற சமூகங்களாகவுமே காணப்படுகின்றன. இவர்கள் இப்பகுதிகளில் தொடர்ந்தும் எவ்வாறு தமது பொருளாதாரச் சூழல்களை ஸ்திரப்படுத்திக் கொள்வர் என்பது கேள்விக்குரியதே.

கொழும்பில் வாழ்பவர்கள் பலர் அந்நிய நாட்டில் வாழும் தமது உறவினரின் உழைப்பில் தங்கியவராகவே உள்ளனர். இவ்வகையில் வந்து சேரும் பணம் மூலதனமாகும்போது அது பெருமளவில் கட்டிடச் - சொத்து (property & real estate) என்ற வகையிலேயே அமைந்துள்ளது. அதனால் தேங்கிய பணம் மாற்று வழிகளூடாக உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ள போதிலும் அதன் மீதான கைப்பிடி (control) இவர்களிடம் உண்டா என்பதும், அதற்கான அரசியல் - திராணியும் செல்வாக்கும் சிங்கள அதிகார வர்க்கத்தினரிடையே ஊடுருவியும் உள்ளதா என்பதும் கேள்விகள். மேலும், இனக் கலவரங்களாலேயே மாற்றி அமைக்கப்பட்ட இலங்கைச் சமூக - அரசியலின் ஓட்டம் நிரந்தரமாக முற்றுக்கு வந்துவிட்டதா என்பதும் அடுத்த கேள்வி.

இவற்றையெல்லாம் கேள்விகளாகவும் பதில் களை ஊகங்களாகவும் பார்க்கும் போது, இவர்கள் ஸ்திரமில்லாத நிலத்திலேயே தமது மனக்கோட்டைகளைக் கட்ட வேண்டி உள்ளனர் என்று இன்றைய யதார்த்தத்தின் கருத்தாகக் கொள்வதில் தப்பில்லை.

வர்த்தகம் என்பதற்கும் ஒரு சமூகத்தின் பொருளாதாரம் என்பதற்கும் பாரிய வித்தியாசங்கள் உள்ளன. பணம் இருப்பதால் தொழில் இருக்கும் எனபதற்கில்லை. பணம் மூலதனமாக மாறுவதானால் அதற்குகந்த தொழில் - திறன்களும் சமூகத்திடம் இருக்க வேண்டும். எனவேதான், இவ்வாறாக எமது சமூகங்கள் அவை இலங்கையில் எங்கிருந்தாலும் குட்டி முதலாளித்துவ நோக்குடன் உள்ள சமூக - மனோவியல் எதிர்பாரப்புகள் தரும் வரைவுக்குள் குடியான - சமூக வாழ்க்கை நடாத்துபவைகளாகவே உள்ளன என்பதில் பாரிய உண்மை உள்ளது. இவ்வகையில் தமிழ்மொழி என்பது இவர்களுக்கு அத்தியாவசியமானது, ஜீவிதமானது. மொத்தத்தில், சிங்கள - அரசும் அதனது அரசாங்கங்களும் செய்யும் ஒடுக்கு முறைகளும், புலிகளது சரித்திரத் தவறுகளும் தமிழ்பேசும் மக்களது தமிழ் மொழியுடனான ஈடுபாட்டை இன்னமும் இறுக்கமாக்ககவே செய்கிறது எனக் கணிப்பதும் தவறல்ல. அதாவது, இன்றைய போர் என்பதில் தோல்விதான் பதிலாகினும் தமிழ் பேசுவோர் ஸ்தானம் இழந்தவராக இன்னும் இருபடிகள் கீழ்நோக்கித் தள்ளப் படினும் அவர்களுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள உறவுகள் கூடுமே இன்றி குறையப் போவதில்லை.

நல்ல விடயம்தான், ஆனால் பரதேசி வாழ்க்கையா என்ற கேள்வியும்தான் ஒலிக்கிறது.

இந்த மக்களெல்லாம், போரற்ற நிலைமையுள் இருந்து பார்த்தாலும், நிலையான வாழ்வுகாண அவர்களது பூர்வீகப் பிரதேசம் எதனைத்தான் முன்வைக்கிறது?

தமிழ் பேசுவோரது பூர்வீக பிரதேசங்கள் என்ற உடமைப்பாட்டினை முறியடிக்க, சிங்கள மக்களது பயிர் செய்வதற்கான காணி நெருக்கடியை பாவித்து மக்கள் குடியேற்றம் செய்த காலம் உண்டு. சாதாரண சிங்கள குடியான மக்கள் சிங்கள பெரும் தேசியவாதத்தின் முற்படையாக விளங்கிய காலமது. இன்றோ அந்த குடியானவர்களது காணி - நிலத்துக் கான நெருக்கடி தூர்ந்து போய்க் கொண்டுள்ளது.

பயிரிடுதல் என்பது புதிய பொருளாதார வலயங்கள் (economic zones) தரும் அடிமை ஊதியத்திலும் பார்க்க பயனற்றதாக உள்ளது. தொழில்மயப் படுத்தப்பட்ட (industrialised) பெரும் தோட்டங்களும் மீன்பிடித் துறையும் இப்பகுதிகளிலுள்ள வாய்ப்புகளை இலகுவில் அதிகரிக்க முடியும். ஆனால் இவ்வகை யான தொழில்துறைக்கு இனங்கள் என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேறுபாடு கிடையாது; மூலதனம், அதற்கீடான இலாபம் (dividend) என்பதே குறி. மேலும் இயந்திரமயமாகும் போது வேலை வாய்ப்புகள் குறைவானதாகவே இருக்கும். ஆகவே இன்றைய சிங்களக் குடியேற்றங்கள் கேந்திரமானவையாகவும் அரசினால் மூலதனமிடப்பட்டு, அரச சட்டங்களால் நியாயப்படுத்தப்பட்டு அரச படைகளால் ஆள்தரப்பட்டு நடத்தப்பட வேண்டியவையாகவுமே உள்ளன. இது எதிர்காலத்திலும் மூலதனத்தை இப்பகுதிகள் உள்வாங்க முடியாமல் உள்ள நிலைமையையே சுட்டிக் காட்டுகிறது.

எனவே, மக்கள் அவர்கள் சிங்களவரோ தமிழ் பேசுவோரோ பெரும் நகரங்களை அண்டி இடம்பெறும் பொருளாதாரச் சூழ்நிலைகளின் ஆதரவை நாடியே நகருவர் என்பது திண்ணம்.

இது ஒருபுறம் இருக்க, இருபது வருடங்களில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிகள் எப்படி யானவை என்பதும், அதனது உலக அந்தஸ்த்து எவ்வகைப்பட்டது என்பவற்றையும் நாம் அறிவோம். அதிலும் தென் இந்தியாவில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் எவ்வகையில் இலங்கைத் தீவிலுள்ள எமக்கு விளைவுகளைத் தரும் என்பதும் கேள்வியே.

இந்தியாவின் நிகழ்வுகள் எப்போதும் எம்மையும் ஆட்கொண்டுதான் உள்ளன. சரித்திரம் தெரியாதவர்கள், சரித்திரத்தை வெறும் பண்டைய அறிவின் பிரதியாக, எம்முடன் ஜீவித உறவற்ற கல்விப் படைப்பாகவே கொண்டு வாழ்க்கையை கழிப்பவர்கள் அவற்றின் தொடர்புகளையும் தொடர்ச்சியான விளைவுகளையும் புரிய முடியாத பேதைகளாவே உள்ளார்கள்.

இந்தியாவில் இருந்துதான் நாம் யாவரும் தீவினை அடைந்தோம். புதிதாக வந்தவர்கள் ஏற்கனவே இருந்தவர்களுடன் வைத்த நல்ல - தீய உறவுகளாலேயே இன்று உள்ளவர்களாக பிறந்துள்ளோம். அங்கு உருவாகிய மதங்களையும், அவர்களோடு தொடர்புபடுத்தப்படும் மொழிகளையும் தான் பேசுகின்றோம். அங்கே மத மாற்றங்கள் இடம்பெறும் போது இங்கும்தான் அவற்றின் தாக்கத்தை அநுபவிக்கின்றோம்.

இவ்வாறாக வெறும் உயிர்பொருளற்ற கதை போல அடுக்கிக் கொண்டு போகும் 'அறிவு' என்பதை அறியாத ஆய்வாளர்கள்தான் இன்று நாம் சுதந்திரமாக சிந்திப்பவர்கள், அச்சுய சிந்தனையுடன் முடிவு செய்பவர்கள், அம்முடிவுகளை நிறைவேற்றிடும் சுயபலம் கொண்டவர்கள் என்றெல்லாம் கிணற்றுத்

*இன்று நாம் சுதந்திரமாக சிந்திப்பவர்கள், அச்சுய சிந்தனையுடன் முடிவு செய்பவர்கள், அம் முடிவுகளை நிறைவேற்றிடும் சுயபலம் கொண்டவர்கள் என்றெல்லாம் கிணற்றுத் தவளைபோல சத்தமிட்டுக் கொள்கிறார்கள்; தமது வெற்றுச் சத்தத்தின் எதிரொலியையே ஊர்ஜிதமாகவும் ஒப்புவிக்கிறார்கள்; அவர்களது வேற்றுமையின் வெற்றுமையை சுட்டிக்காடுபவரை இந்திய ஆதரவாளர் என்று சொல்விடுவதிலேயே தமது சுய - இன்பத்தினை அநுபவித்துக் கொள்கிறார்கள்; இருந்தும் காலா காலத்தில் இந்தியாவிடம் வேண்டி தீர்மானங்களாலும் பகிரங்கமாகவும் மண்டாடுகிறார்கள்.*

தவளைபோல சத்தமிட்டுக் கொள்கிறார்கள்; தமது வெற்றுச் சத்தத்தின் எதிரொலியையே ஊர்ஜிதமாக வும் ஒப்புவிக்கிறார்கள்; அவர்களது வேற்றுமையின் வெற்றுமையை சுட்டிக்காட்டுபவரை இந்திய ஆதரவாளர் என்று சொல்விடுவதிலேயே தமது சுய - இன்பத்தினை அநுபவித்துக் கொள்கிறார்கள்; இருந்தும் காலா காலத்தில் இந்தியாவிடம் வேண்டி தீர்மானங்களாலும் பகிரங்கமாகவும் மண்டாடுகிறார்கள்.

இவர்களது புத்தி ஜீவிதத்தின் வங்குரோத்துத் தன்மையை தாமே புரிந்து கொள்ளக் கூடியவர்களாக இவர்களது இயல்புகளோ திறன்களோ அமையவில்லை என்பது எமக்குத் தெரிந்த போதிலும், இவர்களது காரியங்களால் ஆகும் பாதக விளைவுகளை அநுபவிக்க வேண்டியவராக உள்ளமையால் இவர்களை சுட்டிக் காட்டும் அவசியமும் கொண்டுள்ளோம் என்பதையும் வருத்தத்துடன் கூறவேண்டி உள்ளோம்.

இந்தியாவில், குறிப்பாக தென் இந்தியாவில் நடப்பவை எமது தீவில் எப்போதும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

அது பாக்கு நீரிணையை ஒட்டிய விஸ்தரிப்பாக, தமிழ்நாட்டு பொருளாதார வளர்ச்சிகள், அதனால் தமிழ்நாட்டில் ஏற்படும் விளைவுகள், என அவை எதுவாகத்தான் இருந்தாலும் அவற்றிலான தாக்கங்கள் எமக்கும் காலத்தில் வந்து சேரும் என்பது நிச்சயம்.

எனவேதான் சிங்களம் பேசுவோராயினும் தமிழ் பேசுவோராயினும் சுதந்திரம், சுயநிர்ணைய உரிமை என்றெல்லாம் கூறும் போது, அதற்கும் ஒரு தொடர்புபடுத்தப்பட்ட பெறுமதியே உண்டு என்று நிச்சயமாகச் சொல்கிறோம். இதனை மறுப்பவன் முற்றும் முழுவதுமாக ஒரு வெற்றுக் கோதான அரசியல்வாதியேயின்றி சமூகவியல் ஞானம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்ட, மக்களது சுபீட்சம் பற்றிய தூய்மையான கருத்துக் கொண்டவனாக இருக்க முடியாது என்பதும் திண்ணம்.

உதாரணத்துக்கு இந்தியா தனது நாட்டுக்கு வரவிளையும் இலங்கையர்க்கு கடவுச்சீட்டு ''இனிமேல் அவசியமில்லை'' என்ற ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகக் கொள்ளுங்கள். என்னதான் விளைவுகள் இருக்கும்?

இதுபற்றி வியாபிக்கும் வேலையை வாசகர்களிடமே விட்டுவிடுவோம்.

ஈற்றில், தமிழீழம் என்பதன் பொருள் என்ன? சிங்களத் தேசியவாதியாக தன்னைக் காட்டிக் கொள்ளும் முதலாளித்துவ வர்க்கங்களின் முடிவுகள் என்ன? நாட்டுப் - பற்றுகள்தான் என்ன? எவையாக இருந்தாலும் எதிர்மாறான அநுபவங்களைச் கூடியளவில் சந்திப்பவர்கள், உலகில் எங்கெங்கும் வாழும் உழைக்கும் மக்கள் கதைபோலவே, எமது சிங்களம் அல்லது தமிழ் பேசும் உழைக்கும் - சனத்திரளாகவே இருக்குமன்றி வேறு யாராக இருக்க முடியும்?

தென் இந்தியாவினது பொருளாதார வளர்ச்சி, தொழில் துறைமாற்றங்கள், தொழிலாளர்களது உற்பத்திச் சாதனங்களுடனான உறவுகள், எவ்வாறான வர்க்கங்களை எவ்வெந்த வரையறுப்புகளுள் எதிர் காலங்களில் நிறுத்தி வைக்கும், எவ்வகையான முரண்பாடுகளை தமது பிரதேசங்களிலும் இந்தியா என்ற நாட்டுள்ளும் உருவாக்கி வைக்கும் என்பது சமூகவியலாளர்களது கேள்விகளே. இவற்றின் தாக்கங்களின் எதிரொலிகள் இலங்கையிலும், குறிப்பாக தமிழ் பேசும் சமூகளிடையே கேட்காது என்பவர்கள் சரித்திரத்தை அறிவுக் கண்கொண்டு பார்க்காத குருடர்களே.

எனவே, இலங்கைத் தீவிலுள்ள இனங்கள் சமூகங்களிடையே உள்ள உறவுகள் தென் - இந்திய, குறிப்பாக தமிழ்நாட்டு பொருளாதார உறவகளில் இடம் பெறும் மாற்றங்களாலும், இந்தியா - சிறீலங்கா என்ற இரு நாட்டு உறவுகளின் நேரடி முடிவுகளின் அடிப்படையிலாகினும், மறைமுக காரணிகளின் நகர்வுகளின் விளைவுகளாகவேனும், ஏன்? தனது மக்கள்பற்றி தான் எடுத்துக் கொள்ளும் முடிவுகளாலும் கூட, பாரிய தாக்கங்களுக்கு உள்ளாகும் என்பதும் திண்ணம்.

ஆயினும், இலங்கைத் தீவிலுள்ளவர்கள் இவற்றிலான தாக்கங்களை மட்டுமே, வெறும் இயக்கமிலா பொம்மைகளாக (passive participants) அநுபவிக்கப் போகும் சமூகங்கள் என்று சொல்ல வரவில்லை. உறவு என்பதே இயங்கியலால் உருவாகும் பதம், குறைந்தபட்சம் இரு பகுதிக்கு இடையேயானதாகும் என்பது புரிந்த விடயம். உலகமயமாகும் உற்பத்தி - வர்த்தகச் சந்தையில், தென், தென் கிழக்கு ஆசியாவை மட்டுமின்றி இந்திய சமுத்திரத்தை ஒட்டிய ஆசிய நாடுகள் கூடியளவில் பங்கு கொள்ளும் என்பதும், இங்கெல்லாம் உலகின் உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை குவித்திட முயல்வர் என்பதும் பொருளியல் புரிந்தவர்கள் எதிர்பார்த்திருப்பது.

இவற்றினை முகம் கொள்ள வேண்டின், இந்நாடுகளிடையே கூடிய அரசியல் - பொருளாதார கூட்டுறவுகள் நடவடிக்கைகளில் இணக்கங்கள் இடம் பெறும் என்பதும் எதிர்பார்க்கக் கூடியவையே. இவ்வாறான உறவுகள், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற சந்தையை உருவாக்குமா அல்லது, அமரிக்க ஏகாதிபத்தியம் தனது இச்சைகளுக் கேற்ப உருவாக்க விளையும் இரு அமரிக்கக் கண்டங்களையும், இல்லாவிடில் வட அமரிக்க நாடுகளை மட்டும் இணைத்த சந்தையாக தோன்றுமா என்பதும் கேள்விகளே. அது எதுவாகிலும், உலகத் தொழிற்சாலை எனச் சித்தரிக்கப்படும் சீனாவுக்கோ தான் மிகையாக குறைந்த தரத்துடன் (low tech, cheap - quality) அதிகளவில் உற்பத்தி (mass produced) செய்யும் பாவனைப் பொருட்களை இப் பகுதிகளில் குவித்திட வேண்டிய தேவையோ அழுத்தமானதாகும். எனவே, இச்சந்தைகளை இலகுவில் அணுக இலங்கைத் தீவினை தனது மிதக்கும் கப்பலாக (floating ship) பாவித்திட முனைவதும் பொருளியல் தரும் இயங்கியல் நியதியே.

நிகழ் கால சமூக - இன - அரசியல் சர்ச்சைகளுக்கு நிவாரணம் தேடும் சிங்கள பெரும்தேசிய வாதிகள் இச்சீனதேசத்து பொருளாதாரப் பொறியுள் எவ்வாறு விழுந்திடுவர் என்பதும் கேள்வியே. அம் முடிவுகள் இலங்கைத் தீவினைமட்டுமின்றி இந்தியா வினையும் தாக்கிடும் முடிவுகளாக அமைந்திடின் ஆச்சரியமில்லை. ஆகவே இந்நியா - இலங்கை என்ற உறவுகள் சமநிலையற்றதாகினும், உறவுகளின் விளைவுகள் மனிதரது தனிஉறவுகள் போலவே ஒருபக்க ஓட்டமானதும் அல்ல. இவற்றால் எவ்வாறான மாற்றங்கள் இலங்கையினுள்ளே உருவாகும்?

இவற்றையெல்லாம் கூட்டிச் சிந்திப்பவன் எதிர்கால உறவுகள்பற்றி திடமான முடிவகளை தான் தரமுடியாது என்பதை நன்கு உணர்ந்தவனாக இருப்பான். எனவேதான் இன்றைய முரண்பாடுகள், தீர்வுகள் என்பவற்றை தொலைக் கண் கொண்டவனாக இருந்து கொண்டே முதலிடமும் தருவான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையிலுள்ள உழைக்கும் சமூதாயங்கள், ஒட்டு மொத்ததில் சிங்கள பெரும்தேசியாவதம், சிங்கள - பௌத்த சோவனிசம் என்பவற்றுள் ஒரு புறத்திலும், உடமைகளுடன் உரித்தன உரிமைகளை இழந்தமையால் தனித்தமிழ் தேசியவாதத்தினுள்ளும் சரித்திரத்தின் போக்கினால் சிறையிடப்பட்டு தத்தளிக்கும் குடும்பங்கள். இங்கே நெருப்பினுள் எண்ணைவிடுவது போல உலகத்தையே இஸ்லாமயப்படுத்திடும் இஸ்லாமிய - உலகத்தேசிய வாதிகளது கருத்துகளுக்கு ஏற்ற இசைகொண்ட இஸ்லாமிய வாதம் ஒன்றும் ஒருசில தமிழ் பேசுவோரிடம் உருவாகி வருகிறது. இது பொதுவில் வெளியிருந்து உள்ளேபற்றும் கதைகாரர்களது (chattering classes) வாதங்களாயினும், உள்உடம்பில் பழுக்களும் வலியும் கொண்டதால் இளகிப்போன சமுதாய இருதயங்களை நோய்வாய்ப்படுத்தாது போகிடும் என்பதற்கும் இல்லை.

*இஸ்லாமியச் சகோதரர்கள் பிறம்பான இனம் அல்ல என்று அறுத்துக் கூறிடுவதால் அவர்களுக்கு என்ற தனித்துவமான சமூக அடையாளங்களும், பிரத்தியேகமான எதிர்பார்ப்புகளும் இல்லை என்று அக்கூற்று நிராகரித்து விடவில்லை.*

இஸ்லாமியச் சகோதரர்கள் பிறம்பான இனம் அல்ல என்று அறுத்துக் கூறிடுவதால் அவர்களுக்கு என்ற தனித்துவமான சமூக அடையாளங்களும், பிரத்தியேகமான எதிர்பார்ப்புகளும் இல்லை என்று அக்கூற்று நிராகரித்து விடவில்லை. மாறாக அவர்களது உடமைகளும் மற்றைய வடகிழக்கு வாழ் தமிழ் சமுதாயங்களதும் உடமைகள் ஒன்றறக் கலந்துள்மையுடன், அவர்களிடையே உள்ள சர்ச்சைகள் இனவாதங்களுக்கு உட்பட்ட உரிமைப் பிரச்சனைகளே என்றோம். அப்போதே இப்பிரதேசம் இவர்களதும் உடமை என்றும் ஒத்துக் கொண்டவராகிவிட்டோம். மேலும், இவ் உடமைகளை ஊர்ஜிதம் செய்து நுகர்வதற்க்கு வெளியிலிருந்து சிங்கள அரசமைப்பும், உள்ளிருந்து சமூக - வர்க்க முரண்பாடுகளும் தடையாக உள்ளன என்றும் கூறினோம்.

ஒவ்வொரு தமிழ்பேசும் சமூகமும் தனக்கென்றே உரித்தான தனித்துவத்துடன் தமிழ் பேசும் மக்களது பொதுவான உடமைகளை நுகர்வதற்கு ஏதுவாக எவ்வாறான உரிமைகள் கொண்ட அரசியல் - அலகுகள் அவசியமோ அவையெல்லாம் அங்கீகரிக்கப்பட வேண்டிய அங்கத்துவம் தரும் கடமைகள் கருமங்கள் என்கிறோம். இஸ்லாத்தை தளுவிய தமிழ் பேசும் மக்கள் ஒரு இனம் அல்ல என்று சொல்வதால் அவர்கள் தனித்துவமான சமூகம் அல்ல என்று நாம் கூறிடவில்லை என்று மீண்டும் நாம் கோடிட்டுக் கூறுகின்றோம். சமூகம் வேறு இனம் வேறு என்பதையே சுட்டிக் காட்டுகின்றோம்.

இவ்வாறான தத்துவார்த்த அரசியல் நெறிகள் கோட்பாடுகளைக் கொண்டு வடக்கு - கிழக்கில் நிலவும் உள் முரண்களையும், அதற்கப்பாற்பட்ட உடமைப் பிரச்சனைகளையும் அணுகும் போதே, அவை சகல சமூகங்களாலும் நடைமுறை இயங்கியல் உறவாக ஏற்றுக் கொள்ளப்படும் போதே, தமிழ் பேசும் மக்கள் சரி சிங்களம் பேசுவோர் சரி, அவர்களது உழைக்கும் மக்களது உண்மையான உடமையான உரிமைப் பிரச்சசைனைகள் முதலிடம் பெறும் என்கிறோம். ஒவ்வொரு பிராந்தியங்களிலும் வாழும் பல சமூகங்களிடையேயும் பரஸ்பர நம்பிக்கையும் அதில் தங்கிய உறவும் வளருவதற்கான வாய்ப்பும் உண்டு என்கிறோம். வெறும் பிரிவினை வாதங்கள் மொழிவாரியான எமது இனப் பிரச்சனையில் இஸ்லாமிய மதம் சார்ந்த தமிழ் பேசுவோரது சர்ச்சைகளுக்கு இக்கட்டுரை முக்கிய பாத்திரத்தை வழங்கிய போதிலும், மலைநாடு வாழ் தமிழர்களது சர்ச்சைகளும் அதே உடமைப்பாட்டுடனும் உரிமை களுடனும் தங்கியவை என்று நாம் கருதுகின்றோம் என்பதை எம்மை அறிந்தவர்கள் யாவரும் ஏற்றுக் கொள்வார்கள். இவர்களை, இந்த பாட்டாளி வர்க்கத்தினரது அரசமைப்புடனான சர்ச்சைகளை முதலிடம் தராத எந்தப் போராட்டமும், அவை எந்த தமிழ் பேசும் மக்கள் சமுதாயங்களது சார்பில் பிரேரிக்கப்பட்டாலும் அவற்றின் வீச்சோ குறுகியவை, தர்கீகத்துக்கு ஒத்தாதவை என்பதை மட்டும் இங்கு கூறவேண்டி உள்ளோம். இதற்கான வாதங்களை சமயங்கள் வேண்டும்போது தருவதே யுக்தி என்பதனால் இன்று தவிர்த்திடுவோம்.

சரித்தரம் என்பது சமூகங்களின் உயிர்ப்பொருள், அதற்கு அங்கம் சேர்ப்பதே சமகால நிகழ்வுகள். அதாவது, தன் உள்ளும் - புறமும் கொண்ட உறவுகளின் தாராதரமே, அதற்கான போராட்டங்களே அச்சமூகங்களின் தங்குதலைத் தந்து சரித்திரம் என்பதைத் தொடர வைக்கும் கருவிகள். தனது தொடக்கம் எதுவெனத் தெரிந்த மனிதனும் சமூகமுமே தமது எதிர்காலம் என்ன என்பதை சரியாக முற்கூட்டியே அறிந்தவை ஆகின்றன. ☑

இக் கட்டுரை "தேசம்" சஞ்சிகையால் மார்ச் 10, 2007ல் நடத்தப்பட்ட "தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள்" என்ற கருத்துரையாடலை நோக்கித் தயாரிக்கப்பட்டு பின் விசாலப்படுத்தப்பட்டு உள்ளது. இக்கட்டுரை தொடர்பான உங்கள் கருத்துக்களை எழுத்தில் வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் தமிழ்பேசும் சமூகங்களும் உறவுகளின் எதிர்காலமும்



முஹம்மது எஸ்.ஆர். நிஸ்த்தார்

முதல் கோணல் முற்றும் கோணல் என்ற முதுமொழிக்கேற்ப இரவி சுந்தரலிங்கம் தலைப்பைப் பிழையாக அமைத்து பிழைக்குள் தான் சரி (trying to be OK at being wrong) என்பதை நிலைநிறுத்த எடுத்த முயற்சி வீணானது. அதாவது தமிழர் என்ற வரையறைக்குள் சமயத்தால் சைவர்களையும், தமிழ்க் கிறிஸ்தவர்களையும் வைத்து இஸ்லாமியத் தமிழர் என்ற வரையறைக்குள் சமயத்தால் இஸ்லாமியர் அல்லது முஸ்லீம்கள் என்றறியப்பட்டோரையும் நிறுத்தி, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளின் அணுகுமுறையான ஒன்றும் ஒன்றும் மூன்று (1+1=3) என்ற முடிவுக்குப் பின்கதவால் செல்ல முனைகின்றார். அதாவது, சிங்களம், தமிழ் என்ற இரண்டு இனங்கள் எடுக்கும் எந்த முடிவும் மூன்றாம் இனம் ஒன்றுக்கும் பொருத்தமான முடிவேயாகும் என்பதை அவர் நிலைநிறுத்த முனைகிறார்.

ஏற்கெனவே நாம் பலமுறை தேசம் சஞ்சிகையில் எடுத்துக்கூறிய விடயம் இதுவெனினும், இரவி சுந்தரலிங்கத்தின் நியாயமற்ற போக்கை எதிர் கொள்ளும் முகமாக மீண்டும் இதனை வலியுறுத்துவது இம்முயற்சியின் அடிப்படை நியாயமாகும்.

சுந்தரலிங்கம் என்பவர் இனத்தால் தமிழர் என்று நாம் அடையாளப்படுத்துகின்றோம். மாறாக அவரை சைவத் தமிழர் என்று (அவர் சமயத்தை நம்புபவராக இருந்தால் - அவரின் பெயரின் மூலம்) அழைப்பதில்லை. இருந்தபோதிலும் முஹம்மத் என்ற ஒரு பெயரைக்கொண்ட நபரை இஸ்லாமியத் தமிழர் என்று அழைக்கிறார். இந்த முஹம்மத் என்ற பெயருடையவர் இஸ்லாம் என்ற மதத்தைப் பின்பற்றுவதால் அவர் முஸ்லிம் அல்லது இஸ்லாமியன். அதே போல் இரவி சுந்தரலிங்கம், ஒரு விவாதத்துக்காக இஸ்லாம் என்ற மதத்தை ஏற்றுக்கொள்வாரானால் அவரும் மதத்தால் முஸ்லிம் அல்லது இஸ்லாமியன். ஆனாலும் அவரின் இன அடையாளம் தமிழர் என்றே என்றும் நிலைத்திருக்கும்.

இதே அளவுகோல் தான் முஹம்மத் என்பவரின் இன அடையாளம் தொடர்பானதுமாகும். எனவே முஹம்மத் சமயத்தால் இஸ்லாமியர் அல்லது முஸ்லிம், இனத்தால் தமிழர் என்று கூறி சுந்தரலிங்கத்தின் வாதத்தை நான் இலகுவாக நிரூபித்துவிட்டதாக அவர் திருப்திப்படலாம். ஆனால் இந்த அளவுகோல் தான் சுந்தரலிங்கத்தில் இருந்து என்னை விலகிச்செல்லச் செய்கின்றது.

இந்த அடிப்படையில், இலங்கையின் இனப்பிரச்சி னையை மொழிவாரியாகவே அணுகிட முடியும் என்றும் அவர் அசையாத நம்பிக்கை வைத்து உள்ளதாகவும் வேறுவிதங்களில் இனப்பிரச்சினையை அணுகுபவர்கள் சரித்திர விபத்துக்குள் தத்தமது சமூகங்களை இட்டுச்செல்வர் என்கிறார் சுந்தரலிங்கம்.

அதாவது நாட்டுப்பற்று சற்று அதிகம் கூடிய ஒரு சிங்கள மகனின் பார்வையில் நோக்குவோமானால் ஒரு நாடு என்ற பரந்த நிலையிலிருந்து இனப் பிரச்சினையை அணுக வேண்டுமே தவிர இனங்களின் பிரச்சினையை குறுகியவிதத்தில் மொழிவாரியாக அல்லது நாடுபிரித்தோ அல்லது வேறெந்த விதத்தி லும் தீர்த்துவிட முடியாது என்று சொல்வது போன்ற வாதத்தை ஒத்ததே சுந்தரலிங்கத்தின் வாதம்.

ஆகவே எமது நிலைப்பாடு நாட்டின் இனங்களுக்குச் சுதந்திரம் மறுக்கப்பட்ட நிலையில் ஒரு இனம் மற்றைய இனங்களைவிட மேலானது எனக் கருதப்படும்போது ஒரேநாடு என்ற கற்பனைவாதத்தில் இனப்பிரச்சினைக்கு எப்படித் தீர்வொன்றைக்காண முடியாதோ, அதே போன்றே ஒரே மொழி பேசுபவர்களின் ஒரு பகுதியை மற்றைப் பகுதிகளைவிட கீழ்த்தரமாக நடத்த முற்படுவது அல்லது அவர்களின் அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்படுவது போன்ற அம்சங்கள் நிலைத்திருக்கும்வரை அவர்களை ஒரே இனம் என்று கருத முடியாது. ஒரே இனம் என்ற வரையறைக்கு உள்ளும் நிறுத்த முடியாது. அப்படி நிறுத்த வேண்டிய அடிப்படை நியாயம் இருந்திருந்தால், தெரிந்திருந்தால், சுந்தரலிங்கம் இஸ்லாமியத் தமிழர் என்ற பதப்பிரயோகத்தைத் தவிர்த்திருப்பார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*ஒரே மொழி பேசுபவர்களின் ஒரு பகுதியை மற்றைப் பகுதிகளைவிட கீழ்த்தரமாக நடத்த முற்படுவது அல்லது அவர்களின் அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்படுவது போன்ற அம்சங்கள் நிலைத்திருக்கும்வரை அவர்களை ஒரே இனம் என்று கருத முடியாது. ஒரே இனம் என்ற வரையறைக்கு உள்ளும் நிறுத்த முடியாது.*

அரசாங்கங்களுக்கும் (governments) அரச அமைப்புகளுக்கும் (state structure) இடையே வித்தியாசம் தெரியாதவர்கள் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை மாத்திரம் கொண்டு சரித்திரத்தைப் பின்நோக்கிப் பார்த்து எதிர்காலத்தை சிங்கள அரசமைப்புடனே பேசிக்கொள்ளலாம் என்ற விசனக் கேள்வியைவிட அவர்களது "பிசகிய" கருத்தை நேரே முகம்கொள்வது அவசியம் என்கிறார் சுந்தரலிங்கம். இங்கு அவர் சரியாக என்ன சொல்லவருகிறார் என்பதை ஐயந்திரிபற காண முடியாதுள்ள கட்டத்திலும், அவர் மேற்சொன்ன அரசாங்கங்கள், அரச அமைப்புகள் என்பவற்றுக்கிடையே எமக்கு வித்தியாசம் தெரியாது என்பதைத் தான் தெரிந்து வைத்திருப்பதாக நினைத்துக் கொள்வது அவரின் சிந்தனை சுதந்திரம். அதில் தலையிட எமக்குச் சுதந்திரமில்லை என்பதை நாம் தெளிவாக அறிந்து வைத்துள்ளோம் என்பதுடன், எமது அரசியல்ரீதியான அறிவுவீச்சை நாடிபிடித்துப் பார்க்க முற்படுவாராயின் எமது சிறிய அறிவின் மூலம் அரசாங்கங்களை மாத்திரமல்ல, அரச அமைப்புக்களை மாத்திரமல்ல அரசு (state) என்பதற்கான வித்தியாசங்களையும், வியாக்கியானங்களையும் அக்குவேர் ஆணிவேராகப் பாகுபடுத்திக் காட்ட எமக்குச் சுதந்திரமுள்ளது என்பதை சுந்தரலிங்கம் தாழ்மையுடன் ஏற்கவேண்டும், அல்லது இனியேனும் ஏற்கப் பழகவேண்டும்.

சுந்தரலிங்கத்தின் உடைமை - உரிமை பிரச்சினைகளும், முற்போக்கான அல்லது பிற்போக்கான அணுகுமுறைகளும், இவரின் இந்த உடமை - உரிமைப் பிரச்சினைக்கான அளவுகோல், வரையறை, அந்த வரையறைகளின் அடிப்படைகள் என்பவற்றைச் சரியாக இனப்பிரச்சினை சார்ந்த ரீதியில் விளக்கத் தவறியமை அல்லது அது ஏன் அப்படித்தான் அமைய வேண்டும் என்று விஞ்ஞானபூர்வமான காரணங்கள் இல்லாமல் வார்த்தைகளால் செய்யப்படும் ஒரு அரசியல் பயமுறுத்தலே தவிர வேறொன்றுமில்லை. எனவே இது தொடர்பாக இவரின் மேலதிக விளக்கங்கள் முன்வைக்கப்படும்வரை இதை முற்றுமுழுதாக நிராகரிக்கின்றோம்.

இஸ்லாமிய மதத்தினைப் பின்பற்றுவோர் தமிழ் பேசுவோர் என்பது மட்டுமல்ல அவர்கள் மிகப்பாரிய அளவில் தமிழர்களையே தமது மூதாதையராகக் கொண்டவர்கள் என்பதை மட்டுமல்ல .......... என்று தொடரும் இரவியின் கூற்று.

சிங்களம் பேசும் (தமிழே தெரியாத) இஸ்லாமியர் இலங்கையில் இருப்பதும், இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர்களில் சிங்களத் தாய்மார் போல தமிழ்த் தாய்மார்களும் ஒரு பகுதியினரே என்பதும், ஆனால் தந்தை வழியில் அரபு அல்லது அரபுக் கலப்புடைய லத்தீன் மொழியில் மௌரா (Maura) அல்லது மூர் (Moor) என்று ஆங்கிலத்தில் அல்லது தமிழில் சோனகர் என்று அழைக்கப்படும் ஒரே தந்தை வழியில் வந்தோரே நாம் என்பது சுந்தரலிங்கத்துக்கும் இதுவரை தெரிந்திருக்காத விடயம் என நினைக்கிறேன். எனவேதான் இலங்கையில் பெரும்பான்மை முஸ்லிம்கள் இனத்தால் சோனகர் என அடையாளம் காணப்படுகின்றனர்.

இஸ்லாம் என்ற சமயம் - நாடு, தேசியம், மொழி என்பவற்றை மாத்திரமல்ல குலம் (tribe) முறைகளையும் அங்கீகரிக்கின்றது என்பதைப் புரியாமல், மேலுள்ளவைகளை முஸ்லிம்கள் ஒரு கட்டுக்கதையாகப் பார்ப்பதாக நடைமுறை உலகுக்குப் பொருந்தாத கதையொன்றை சுந்தரலிங்கம் சொல்ல முற்படுகின்றார்.

மேலும் இஸ்லாம் நிதர்சனங்களை என்றுமே மறுதலித்ததில்லை. உ-ம்; முன்னைய ஈராக் - ஈரான் யுத்தம் இரண்டு இஸ்லாமிய நாடுகள் முட்டி மோதிக்கொண்டன என்பதைவிட அது அரபுகளுக்கும் பாரசீகர்களுக்கும் இடையேயான யுத்தமாகவே கொண்டனர். பாலஸ்தீனப் போராட்டம் யூத சியோனிசத்துக்கும் பாலஸ்தீன அரபுகள் (இஸ்லாமிய, கிறிஸ்தவர்) இடையேயான போராட்டமாகக் காட்சிப்படுத்தப்பட்டது. ஆப்கானிஸ்தானில் குலங்களுக்கு இடையேயான போராட்டம் தாடர்கின்றது. இப்படி ஈராக்கின் உள்நாட்டு யுத்தத்தில், சோமாலியாவின் உள்நாட்டு யுத்ததில், சூடானின் டாபூரில் நடைபெறும் இன அழிப்பில் எல்லாம் இந்த இன, குல, கோத்திர முரண்பாடுகள் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் ஒரு இனம், ஒரு குலம், ஒரு கோத்திரம் மற்றையதைவிட பெரிதென்றோ சிறிதென்றோ பேதங்களை ஏற்படுத்தாதீர்கள் என்றுதான் ஒரு முஸ்லீமுக்கு இஸ்லாம் போதிக்கின்ற தேயன்றி இப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என்று நிதர்சனத்திலிருந்து மனிதனை மாயைக்குள் கொண்டு செல்லவில்லை. இஸ்லாம் என்பது ஒரு வாழ்க்கை முறை.

சுந்தரலிங்கம் கூறுவதுபோல் சமூகங்கள் என்பது தேசங்கள் அல்ல (இங்கு இவர் தேசியத்தை தேசங்கள் எனத் தவறாகக் கையாள்கின்றார் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தேசியம் என்பது மத ரீதியான இனங்கள் அல்ல என்பதை நாம் பெருமனதுடன் ஏற்றுக்கொள்கின்றோம். இதே அடிப்படையில்தான் நாம் இஸ்லாமியர்களாக இருப்பதால் மத அடிப்படையில் எம்மைத் தனியான இனமாக ஏற்கும்படி கேட்பதற்கு மாறாக சோனகர் என்ற தனியான இனமாக இருப்பதனால்தான் எம்மை ஒரு தேசிய இனமாக ஏற்கனவே எமது அரசியல் யாப்புகள் அடையாளம் கண்ட விதத்திலேயே ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கின்றோம். தவிர இது வசதி கருதிய ஒரு புதிய கண்டுபிடிப்போ அல்லது தற்காலிக ஏற்பாடோ அல்ல.*

நினைக்கின்றேன்). தேசியம் என்பது மத ரீதியான இனங்கள் அல்ல என்பதை நாம் பெருமனதுடன் ஏற்றுக்கொள்கின்றோம். இதே அடிப்படையில்தான் நாம் இஸ்லாமியர்களாக இருப்பதால் மத அடிப்படையில் எம்மைத் தனியான இனமாக ஏற்கும்படி கேட்பதற்கு மாறாக சோனகர் என்ற தனியான இனமாக இருப்பதனால்தான் எம்மை ஒரு தேசிய இனமாக ஏற்கனவே எமது அரசியல் யாப்புகள் அடையாளம் கண்ட விதத்திலேயே ஏற்றுக்கொள்ளுமாறு கேட்கின்றோம். தவிர இது வசதி கருதிய ஒரு புதிய கண்டுபிடிப்போ அல்லது தற்காலிக ஏற்பாடோ அல்ல என்பதையும் புரிந்துகொள்ளும்படி கேட்கின்றோம்.

ஒருவேளை சுந்தரலிங்கத்தின் இந்த நிலைப்பாட்டுக்கு இந்நாட்டின் முஸ்லிம் புத்திஜீவிகள் என்று சொல்லிக் கொள்வோரும் காரணமாக இருக்கலாம். ஏனெனில் இவர்கள் தங்கள் அறியாமை காரணமாக அரசியலில் இன அடையாளம் என்பதனை புரியாத காரணத்தால் அதிலும் விஷேடமாக இலங்கையின் சமகால, எதிர்கால அரசியல் வாழ்வில் இதன் முக்கியத்துவத்தையும் ஆகக் குறைந்தது இதன் தேவையையும் அறியாததால் முஸ்லீம்களை தனி இனமாக அல்லது ஆகக் குறைந்தது தனித்துவத் தன்மைகொண்ட ஒரு தனிப்பிரிவினராக ஏற்றுக் கொள்ளக் கேட்பது வேடிக்கைக்குரிய விடயம். இது மாத்திரமல்ல இந்த விடயத்தில் நாம் ஏற்கெனவே பலமுறை எச்சரிக்கை செய்ததுபோல் இன்று சுந்தரலிங்கம் என்ற தனிமனிதன் கேட்ட கேள்வியைப் போல், காட்ட முயன்ற நிரூபிக்கமுடியாத நியாயங்கள் போல், நாளைய தமிழ் அரசு, அதை ஆள வரும் அரசாங்கங்கள், அதன் ஸ்தாபனங்கள் (institutions) எல்லாம் எம்மிடம் கேள்வி கேட்பது மாத்திரமல்ல எமக்கு பதில் தெரியாத நிலைமையை சர்வதேச சமூகம் முன்நிறுத்தி எமது குரல்வளையை நசுக்கிவிடும் அபாயம் இருப்பதையும் இப்போதாவது புரிந்துகொண்டால், it may not be too late.

இலங்கையில் இஸ்லாமியர் ஓர் இனமென்றால் அந்த இனத்துக்கு யாருடன், எதனுடன் ஏன் பிரச்சினை என்ற கேள்வி.

நாம் இஸ்லாமியரை இஸ்லாமியராக இருப்பதால் தனியினமாக அழைக்கவில்லை. அப்படி அழைக்க முடியாது என்பதிலும் எமக்குத் தெளிவு உண்டு. ஆகவே தான் எமது இனம் சோனகர் என்கிறோம். இப்படி நாம் தனியான இனமாக இருப்பதனால் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், தவிர்ந்த மற்ற எல்லாவிதமான குழுமங்கள் (entity) உடனும், புதிதாக விடுதலைப் புலிகளின் அரசு நோக்கிய அரசுடனும் (Defecto), அதன் ஸ்தாபனங்களுடனும், ஏன் அதன் தனிப்பட்ட உறுப்பினர்களுடனும் பிரச்சினைகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆகவே பிரச்சினை உண்டா இல்லையா எனப் பதில் தேட சுந்தரலிங்கம், விடுதலைப் புலிகளின் தோற்றத்திற்கு முன்னான - பின்னான காலம் என நாம் பிரித்துப் பார்ப்பதாகக் கூறுவதும், புலிகளுடனான வேற்றுமைகளை மாத்திரம் வைத்து நாம் பிழையான ஆதாயம் தேட முயற்சிப்பதாகக் காட்ட முனைவதும் ஆரோக்கியமான விடயமல்ல என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதேநேரம், தனியான ஓர் இனம் தனது இருப்பை ஊர்ஜிதம் செய்ய யாருடனான பிரச்சினையூடாகத்தான் சாத்தியமாகும் என்ற அவர் கருத்தும் மிகப் பிழையானது என்பதை நாம் தெளிவாகக் கூறுகின்றோம்.

ஒடுக்கப்படும் சமூகம் இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றவது ஒரு தற்செயலான சம்பவம் என்றே கணிக்கப்படுவதாகக் கூறும் அவர் கூற்று. இது இலங்கையில் இருந்து பலகாலம் அவர் அந்நியப்பட்டு உள்ளார் என்பதையும், அப்படி இலங்கையில் இருந்த காலத்தில் அவரின் அனுபவக் குறைவையும் காட்டிநிற்கின்றது. இதைப் பின்வரும் உதாரணம் மூலம் சரியாகப் புரிந்துகொள்ளலாம். அதாவது, சிங்கள அரசாங்கங்கள், விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களும் தமிழர்களால் ஆனது என்ற காரணத்துக்காக அவற்றுடன் நாம் முரண்படவில்லை. இவை அரசுக்கு எதிராக வரும்போது தான் அவற்றை நாம் அழிக்க முயல்கின்றோம். ஏனெனில் JVPயினரை (98சத வீதம் சிங்களவர்கள்) அன்று அழித்தோம். இன்று விடுதலைப் புலிகள் தவிர அனேகமாக அனைத்து தமிழர் இயக்கங்களும் எம்முடன் இணைந்துள்ளன. அவர்களை நாம் பாதுகாக்கின்றோம். ஆகவே விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர்களைக் கொண்டிருப்பது ஒரு தற்செயலான சம்பவம் என்றால் அதை புத்திசுவாதீனமுள்ள எவரும் ஏற்றுக்கொள்வர் என்பது யாரும் ஏற்றுக்கொள்ளமுடியாத விடயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



த ஜெயபாலன்

# இலங்கை இந்திய ஒப்பந்த மாகாண ஆட்சியே சாத்தியம்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப் பட்ட மாகாண சுயாட்சியே இலங்கை இனப் பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வு என்றும் அதனை அமுல்படுத்துவதற்கு தமிழ் தலைமைகளும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் அழுத்தங்களை வழங்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா லண்டனில் இடம்பெற்ற சந்திப்பில் கேட்டுக் கொண்டார். வி சிவலிங்கம் தலைமையில் தமிழ் சமாதான ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பிரித்தானிய பாராளுமன்ற பிரதிநிதி அன்டி லவ் உம் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் டொக்டர் நிக்கலஸ்பிள்ளை, எழுதாளர் ராஜேஸ்பால, கெங்காதரன், மூன்றாவது மனிதன் ஆசிரியர், பௌசர், கவுன்சிலர் போல் சத்தியநேசன், லாபீர், சட்டத்தரணி பசீர், தமிழ் சமாதான ஒன்றியத் தலைவர் டொக்டர் பாலா ஆகியோர் இங்கு கருத்தரை வழங்கினர். இன்றுள்ள மோசமான நிலையில் இவ்வாறான ஒரு அணுமுகுறையே சிறந்தது எனக் கூறி அவர்கள் அமைச்சர் டக்ளஸின் தீர்வுத் திட்டத்தை வரவேற்றனர். இதன் நடைமுறைச் சாத்தியம் குறித்து ராகவன் கேள்வி எழுப்பினார். அரசு இராணுவத் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலையில் 90 வீதமான சிங்கள் மக்கள் யுத்தத்தை ஆதரிக்கின்ற நிலையில் அரசு இத்தீர்வுக்கு ஆதரவு வழங்குமா என ராகவன் சந்தேகம் வெளியிட்டார்.

அமைச்சர் தனது உரையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அனந்தசங்கரி, தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் கருணா ஆகியோர் மீது தனது விமர்சனங்களை வெளிப்படுத்தினார். ‘‘சமஸ்டியை எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளதாக ஒரு தலைவர் (ஆனந்தசங்கரி) அடிக்கடி வந்து உங்களுக்கு சொல்லிச் செல்கிறார். அதில் எந்த உண்மையும் இல்லை’’ என்றார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. கருணா பற்றிக் குறிப்பிட்ட அவர் கருணாவுடைய பலம் கடத்தப்பட்ட

---

>>>

**அதே நிலைப்பாடுதான் இலங்கை முஸ்லிம் தொடர்பானதுமாகும்.**

**எனவே முதலில் இலங்கையில் சமயத்தால் முஸ்லிமாய் இருப்பவர் இனத்தால் சோனகர் என்பதை மறைத்து தமிழ் மொழியை பெருவாரியான முஸ்லிம்கள் தாய்மொழியாய்க் கொண்டுள்ளனர் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களை இஸ்லாமியத் தமிழர் என்றோ, தமிழ் பேசும் முஸ்லிம்கள் என்றோ கொச்சைப்படுத்த வேண்டாம் என்கின்றோம்.**

**எமது சமயம் பற்றிப் பேசுவதாயின் மட்டும் எம்மை இஸ்லாமியர் என்றோ முஸ்லிம் என்றோ அழையுங்கள். தமிழ் என்றால் தமிழர்களுக்கு மட்டுமான மொழியென மொழிக்கு உரிமையில்லாதவராய் எம்மையாக்க முயலாதீர்கள். இனம் என்ற பிரச்சினை வரும்போது நாம் தனியான இனம் அல்ல எனப் புறந்தள்ளாதீர்கள். எனவே பல்லினப் பிரச்சினையை இரண்டு இனங்களுக்கிடையிலான பிரச்சினையாக பிழையாகக் கையாளமுற்படின் பிரச்சினை மேலும் மேலும் சிக்கலடையுமே தவிர சீக்கிரம் தீர்வை நோக்கிச் செல்லாது.** ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுவர்கள் தான் எனக் குறிப்பிட்ட அமைச்சர் ஆட்கடத்தல், கொள்ளை, படுகொலையையே கருணா செய்து கொண்டு உள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

“ஆனந்தசங்கரி ஐயா, மாகாணசபை மக்களால் நிராகரிக்கப்பட்டது என்கிறார் அனால் உண்மையில் அப்படி அல்ல அது சரியானவர்களின் கையில் செல்லவில்லை என்பதே உண்மை” என்றும் அமைச்சர் டக்ளஸ் அங்கு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் “சந்திரிகா காலத்தில், இந்த மாகாணசபையை அமுல்படுத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டது. ஆனால் இறுதிக் கட்டத்தில் சம்பந்தன் – ஆனந்தசங்கரி உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அதனை நிராகரித்து செயற்படுத்த விடாது தடுத்தனர்” என்றார். அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இலங்கையில் உள்ள ஏனைய மாகாணங்கள் பயன்பெற்றது போல் வடக்கு கிழக்கு மாகாணமும் பயன்பெற்றிருக்கும் என்றும் வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டு இவ்வளவு மோசமான நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு இருக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கேள்வி எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர் அரவிந்தன் “அமைச்சராக நீங்கள் இருந்த போது அமுல்படத்த மேற்கொண்ட நடவடிக்கையை கூட்டனியினர் எப்படிக் குழப்பியிருக்க முடியும்” எனக் கேள்வி எழுப்பினார். மேலும் வடக்கு – கிழக்கு பிரிக்கப்பட்ட போது அமைச்சர் என்ற வகையில் டக்ளஸ் அதனை எதிர்க்கும் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் அரவிந்தன் அங்கு முன் வைத்தார். இது தொடர்பான விவாதம் அமைச்சருக்கும் அரவிந்தனுக்குமிடையே சில நிமிடங்கள் நீடித்தது.



இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மாகாண சபையை மூன்று கட்டமாக அமுல்படுத்தும் திட்டம் அங்கு அறிவிக்கப்பட்டது. முதலாவது கட்டமாக இடைக்கால சபையை ஏற்படுத்தவது. இரண்டாவது கட்டமாக மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பலப்படுத்துவதுடன் விசேட அதிகாரங்களைக் கோரி உறுதிப்படுத்தவது. மூன்றாவது கட்டத்தில் அனைத்து கட்சிகளின் பங்குபற்றுதலுடன் தேசிய இனங்களின், பிராந்தியங்களின் சுதந்திரத்தையும் சமத்தவத்தையும் உறுதிப்படுத்தம் இறுதித் தீர்வைக் காண்பது.

## தவிகூ தலைவர் ஆனந்தசங்கரி

**தேசம்:** வி.புலிகளுக்கு எதிரான ஒரு சிறுபான்மை அணி உங்களுடைய தலைமையிலும் அமைச்சர் டக்ளஸ் தலைமையிலும் பிளவுபட்டு உள்ளது. நீங்கள் இருவருமே வெவ்வேறு தீர்வுத் திட்டங்களையும் வைத்துள்ளீர்கள் ?

**ஆ.சங்கரி:** டக்ளசுடைய தீர்வுத் திட்டம் பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய தீர்வுத் திட்டம் வட்டு வரைக்கும் போயாச்சுது. இனி தேங்காயில் கை வைப்பது தான். அது பற்றி வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை. நானல்ல அரசாங்கமே சமஸ்டி என்று பேசத் தொடங்கிவிட்டது வட்டுவரைக்கும் போய்விட்டது. தேங்காய் புடுங்கிறதா, இறங்கிறதா என்றது தான் கேள்வி. 30 நவம்பர் 2006ல்

தீர்வுத்திட்டங்களில் தமிழ்பேசும் மக்கள் என்று சொல்லிக் கொண்டு முஸ்லீம் மக்களுக்கான உரிமையை வழங்குவது பற்றி தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் முடிவுகளை எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் முஸ்லீம் மக்கள் தங்கள் முடிவுகளை தாங்களே எடுப்பார்கள் எனவும் சட்டத்தரணி பசீர் கருத்து வெளியிட்டார். முஸ்லீம்கள் தனித்தவமான சக்தியாக உள்ளனர். அவர்களை தமிழ்பேசும் மக்கள் எனப் பார்ப்பது பிற்போக்குத்தனமானது எனவும் பசீர் அங்கு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் ஈபிடிபி கட்சியின் மனித உரிமை மீறல்கள் பற்றி வருகின்ற குற்றச்சாட்டுகள் பற்றி அமைச்சர் பதிலளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தமிழ்பேசும் மக்கள் என்ற பசீருடைய கருத்துடன் தான் முரண்படுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர் அதற்கான விளக்கத்தை நேரமின்மை காரணமாக அளிக்க முடியவில்லை எனத் தெரிவித்தார். ஈபிடிபியினர் மனித உரிமைகளை மீறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை வெறும் பொய்ப் பிரச்சாரம் என் அவர் முற்றாக நிராகரித்தார். யுரிஎச்ஆர் அறிக்கைகளில் தமிழ் கட்சி ஒன்றின் செல்வாக்கு இருப்பதையும் அதனுடன் தமது கட்சிக்கு ஏற்படும் உறவுகளைப் பொறுத்தே இக்குற்றச்சாட்டுகள் வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். ஈபிஆர்எல்எப் (நாப) அணியின் தலைவர் சிறிதரனையெ அமைச்சர் மறைமுகமாக இவ்விடத்தில் சுட்டிக்காட்டி இருந்தார்.

டக்ளஸ் ஆளும் கட்சியில் ஒரு அங்கமாக இருப்பதாலும் தொடர்ச்சியாக அரசின் தயவில் தங்கி இருக்க வேண்டிய நிலை இருப்பதாலும் அவருடைய செயற்பாட்டு எல்லைகள் கட்டப்படத்தப்பட்டு இருப்பது அவருடைய உரையில் தெளிவாகத் தென்பட்டது. அதாவது அமைச்சர் (புலிகளுக்கும் அரசுக்கும்) இடையால் சைக்கிள் ஓடிக் கொண்டிருக்கிறார். ☑

www.tamilarangam.net

படுகொலைகள், அழிவுகள் என தமிழினம் நாளாந்தம் இருளை நோக்கத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. இருபது வருடங்களுக்கு முன் 1987 யூலை 21ல் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தமே தமிழ் மக்களுக்கு கூடுதல் அதிகாரத்தை சட்டபூர்வமாக வழங்கிய ஒப்பந்தமாக உள்ளது. அதயைாவது நடைமுறைப்படுத்தக் கூடாதா என தமிழ் மக்கள் தள்ளப்பட்டு உள்ளனர்.

அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். இந்தியப் படைகளுடன் மோதினர். 1,300 வரையான இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கான போராளிகளும், பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் கொல்லப்பட்டனர். 1990 மார்ச்சில் இந்தியப் படையினர் இலங்கையைவிட்டு வெளியேறினர். ஒப்பந்தத்தை உருவதக்கிய ராஜீவ்காந்தியையும் விடுதலைப் புலிகள் 1991 மேயில் படுகொலை செய்தனர். 2002ல் அதனை துன்பியல் சம்பவம் என்றனர். 2006ல் அன்ரன் பாலசிங்கம் அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இன்று 20 வருடங்களுக்குப் பின் இந்தியா உதவ வேண்டும் என விடுதலைப் புலிகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் ஈரோசையும் தூதுவிடுகின்றனர்.

ஒரு காலத்தில் ‘அமீர் அண்ணா! தம்பி பிரபா!’ என்றிருந்தவர்கள் 1989 யூலை 13ல் தம்பியின் படைகள் அமிர்தலிங்கத்தை தீர்த்துக்கட்டினர். அமிர்தலிங்கத்தை இல்லாமல் செய்தவர்களால் அவர் விட்ட இடத்தில் இருந்து முன்நோக்கிச் செல்ல முடியாவிட்டாலும் அவ்விடத்திலே யாயினும் நின்று பிடிக்க முடியவில்லை. படுகொலை செய்யப்படுவதற்கு எட்டு மாதங்களுக்கு முன் அமிர்தலிங்கம் பகிர்ந்து கொண்ட கருத்துக்கள் 20 வருடங்கள் ஆகும் நிலையில் இன்று நிஜமாகி வருகிறதா?

## மரணத்திற்கு முன்னைய வாக்குமூலம்:

# அமீருடனான நேர்காணல்

ரி கொன்ஸ்ரன்ரைன்

*தமிழர் விடுதலைக் கூட்டணியின் அப்போதைய தலைவர் அமிர்தலிங்கத்துடனான இப்பேட்டி முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளியாகிய ஈழமுரசு பத்திரிகைக்காக 11 நவம்பர் 1988ல் அமிர்தலிங்கம் லண்டன் வந்திருந்தபோது எடுக்கப்பட்டது. நான் ஈழமுரசு முதற் தடவையாக வாரப்பத்திரிகையாக யாழ்ப்பாணத்தில் வெளியாகியபோது பணியில் சேர்நதேன். லண்டன் வந்த பின்னரும் தொடர்ச்சியாக எழுதி வந்தேன். ஈழமுரசு பத்திரிகை பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளால் பலாத்காரமாகக் கையகப்படுத்தப்பட்டு அவர்களால் நடத்தப்பட்டது. புலிகள் அப்பத்திரிகையைக் கையகப்படுத்தும் வரை அதன் சிறப்பு நிருபராகக் கடமையாற்றினேன். ஈழமுரசு பத்திரிகையை கையகப்படுத்திய விடுதலைப் புலிகள் அப்போது எடுக்கப்பட்ட இந்த நேர்காணலை வெளியிட மறுத்ததால் அது இதுசரை எங்கும் பிரசுரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*ஈழமுரசு பத்திரிகையின் உரிமையாளர் திரு மயில் அமிர்தலிங்கம் அவர்கள் பின்னர் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். மயில் அமிர்தலிங்கம் (TULF தலைவர் அ. அமிர்தலிங்கத்துக்கு எந்தவிதத்திலும் சொந்தம் இல்லாதவர்). அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ் மாவட்ட உறுப்பினராக இருந்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஊர்காவற்றுறையில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியும் கண்டவர்.*

*அப்போது ஈழமுரசுவின் பிரதம ஆசிரியராக எஸ்.தி. என்றழைக்கப்பட்ட எஸ்.திருச்செல்வம் அவர்கள் கடமையாற்றினார். பின்னர் இவர் முரசொலி பத்திரிகையின் ஆசிரியராக்ககடமையாற்றினார். அப்போது இந்தியப்படையின் ஆதரவுடன் செயற்பட்ட EPRLF அமைப்பினர் எஸ்.திருச்செல்வத்தின் ஒரே மகன் அகிலனை மனிதநேயமின்றிச் சுட்டுக்கொன்றனர். EPRLF இனர் எஸ்.திருச்செல்வத்தைக் கொலைசெய்ய அவரது வீட்டுக்கு வந்தபோதே, அங்கு அவர் இல்லாத காரணத்தினால் அவரது மகனை அழைத்துச் சென்று சித்திரவதை செய்து கொலைசெய்தனர். தற்போது திருச்செல்வம் தம்பதியினர் கனடாவில் ரொரன்ரோவில் தமிழர் தகவல் என்ற மாத இதழை நடத்திவருகிறனர்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொன்ஸ்: அண்மையில் நடந்து முடிந்த மாவட்ட சபைத் தேர்தல் முடிவுகளை ஒரு ஜனநாயக முடிவாக நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா?

அமீர்: இம்முடிவுகளை ஒரு முழுமையான ஜனநாயக முடிவாக ஏற்க முடியாவிடினும் ஒரு ஜனநாயக அமைப்பு முறைக்குள் செல்லக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன். எது எப்படி இருப்பினும் இந்தத் தேர்தலை நாங்கள் தவிர்த்திருக்க முடியாது. அது யதார்த்தமில்லை.

கேள்வி: எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?


கொன்ஸ்: ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் கலந்து கொள்வதைப் பற்றிய ஒரு முடிவிற்கு நாம் இன்னமும் வரவில்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் SLFP சார்பில் போட்டியிடும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எங்களைச் சந்தித்த போதிலும் தமிழரின் பிரச்சினை குறித்த தனது நிலைப்பாட்டை விரிவாகத் தெளிவுபடுத்தவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் பிரேமதாசா இன்னமும் எங்களைச் சந்திக்கவில்லை. கூட்டு முன்னணியின் சார்பில் போட்டியிடும் ஒசி குணவர்த்தனா மட்டுமே என்னுடன் அக்கறையுடன் விரிவாகப் பேச்சில் ஈடுபட்டுள்ளார். இந்த நிலைமையில் நாங்கள் தேர்தலில் பங்குபற்றுவதைப் பற்றியோ அல்லது யாரை ஆதரிப்பது என்பது குறித்தோ எவ்வித முடிவுக்கும் வரமுடியாதுள்ளது.

கொன்ஸ்: புதிய ஜனாதிபதி தேர்வுசெய்யப்பட்டதும் இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கப்படுமா?

அமீர்: பிரேமதாசா அவர்களும் திருமதி பண்டார நாயக்காவும் தற்போது இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். இந்த உறுதி தேர்தலின் பின்பும் நிலைக்குமா என்பது எனது சந்தேகமே. நான் முக்கிய இந்திய இராஜதந்திரி ஒருவருடன் பேசியபோது, 'தமிழ் மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் இந்திய இராணுவம் தொடர்ந்து இங்கு இருக்கவேண்டும் என்று உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுத்தால் இந்திய இராணுவம் தொடர்ந்தும் இருக்கும்' என்று குறிப்பிட்டார். 'ஜுலை 87இல் கைச்சாத்திடப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர். ஒப்பந்தப்படி தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கு இந்தியா தமது பூரண உத்தர வாதத்தை அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தமிழ் முதலமைச்சரின் உத்தியோகபூர்வமான கோரிக்கைக்கு நாம் கட்டாயம் கடமைப்படுவோம்.' என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொன்ஸ்: இந்திய இராணுவம் வெளியேறுவதைப் பற்றிய உங்களின் தனிப்பட்ட அபிப்பிராயம் என்ன?

அமீர்: இந்திய இராணுவம் வெளியேறினால்



www.tamilarangam.net

" 'அமிர்தலிங்கம் - இலங்கையில் இருக்கின்ற ஈழத் தமிழகம் வேண்டுமென்று கோருகின்ற தமிழர்களுடைய தலைவர். அமிர்தலிங்கம் மிக மென்மையான இதயம் படைத்தவர்.... அங்கே நாடாளுமன்றத்தில் பேசுகிறார்கள். இந்த அமிர்தலிங்கத்தை கொலை செய்ய வேண்டும். இரண்டு பாக்கு மரங்களிடையே கட்டி இரண்டாக கிழ்த்தெறிய வேண்டும் என்று பேசுகிறார்கள்....'

1981ம் ஆண்டு அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றி நான் இவ்வாறு பேசினேன். ஆனால் 1989ல் அவரை இல்லாமல் செய்து விட்டார்கள்."

கலைஞர் மு கருணாநிதி

சிறிலங்காவின் இராணுவத்தினரின் அட்டகாசம் மீண்டும் தலைதூக்கும். தமிழர்கள் கட்டாயம் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவர். இது குறிப்பாக வவுனியா, திருகோணமலைப் பகுதியில் அதிகமாக இடம்பெறும். இந்திய இராணுவம் தற்போது வெளியேறக்கூடாது என்பதில் நாம் மிக மிக உறுதியாகவும் இருக்கிறோம். தமிழ் பகுதிகளின் பொலிஸ் பிரிவு தமிழ் மக்களால் எற்படுத்தப்பட வேண்டும். தமிழர்களுக்கான பூரண பாதுகாப்பை உறுதி செய்துவிட்டே இந்திய இராணுவம் வெளியேற வேண்டும். எங்களால் சிங்கள அரசாங்கத்தையும் அதன் இராணுவத்தையும் நம்பவே முடியாது.

கொன்ஸ்: இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்காவில் வைத்திருப்பதைப் பற்றி இந்திய அரசாங்கத்தின் நிலையில் ஏதும் மாற்றம் வரச் சாத்தியமுள்ளதா?

அமீர்: ஆம் உங்களின் கேள்வி எனக்குப் புரிகின்றது. எதிர்வரும் இந்தியப் பொதுத் தேர்தலை மனதில் வைத்து ராஜீவ் காந்தி சிறிலங்காவுக்குள் சென்ற விடயத்தை கடுமையாக விமர்சித்து பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. சகல இந்திய எதிர்க்கட்சித் தலைவர்களுடனும் நான் நீண்ட பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை அனைத்துக் கட்சிகளும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு தமது பரிபூரண ஆதரவை தெரிவித்து உள்ளனர். ஆகவே, இந்தியாவின் ஆட்சி மாறினாலும் தற்போதுள்ள நிலைமையில் எதுவித மாற்றமும் இருக்காது.

கொன்ஸ்: தற்போது தமிழ் நாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் மு.கருணாநிதி இந்திய இராணுவத்தின் இலங்கை நிலைப்பாட்டைக் கடுமையாகக் கண்டித்து வருகிறாரே. கருணாநிதி பதவிக்கு வந்தால் இதே நிலைப்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடிப்பாரா?

அமீர்: தற்போது கலைஞர் கருணாநிதி கூறும் வேகத்தில் அவர் பதவிக்கு வந்ததும் கூறமாட்டார். அவரை நான் பல முறை சந்தித்துவிட்டேன்.

கொன்ஸ்: ஜேவிபி இனுடைய அண்மைய போக்குப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

அமீர்: தேர்தல் முறையை பகிஸ்கரித்து தனிக் கட்சி ஆட்சியை நிறுவுவதே அவர்களுடைய நோக்கம். தமிழர்களைப் பொறுத்தவரை இவர்கள் ஆபத்தானவர்கள். தனிப்பட்ட முறையில் எனக்கு எதிராகவும் தவிகூட்டணிக்கு எதிராகவும் இவர்கள் அண்மைக்காலமாகச் செய்துவரும் பிரச்சாரம் மோசமானது.

கொன்ஸ்: தமிழ் பகுதிகளில் இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தற்போது ஏற்படுத்தி வருகின்றது என்ற தமிழ் ஆயுத அமைப்புகளின் குற்றச்சாட்டை உங்களால் உறுதிப்படுத்த முடியுமா?

அமீர்: எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்தது முதல் எந்தக் குடியேற்றமும் நிகழவில்லை. தற்போது விரிவாகக் கதைக்கப்படும் குடியேற்றம் 1984 காலப்பகுதிகளில் மன்னார் - அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்ற குடியேற்றமாகும். தற்போது அப்படி எந்தக் குடியேற்றமும் இடம்பெறவில்லை.

கொன்ஸ்: இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை அழித்துவிடும் என நினைக்கிறீர்களா ?

அமீர்: சிலருடைய பிரச்சாரத்தைப் போல் இந்திய இராணுவம் புலிகளை அழித்துவிடும் நோக்குடன் இங்குவரவில்லை. அவர்கள் புலிகளை அழித்துவிட முயற்சிக்கவும் இல்லை. அவர்கள் புலிகளுக்கு அழுத்தத்தையே வழங்கி வருகிறார்கள்.

கொன்ஸ்: TULF _ LTTE இணைந்து செயற்படுவதற்கான வேலைத்திட்டங்கள், இணையும் உடன்பாட்டுக்கான சாத்தியப்பாடுகள் உண்டா?

அமீர்: புலிகளுடனான உடன்பாடு மட்டும் தமிழ் சமூகத்திற்குள் ஒற்றுமையை ஏற்படுத்தும் என்று நான் நம்பவில்லை. அனைத்து தமிழ் அமைப்புகளுடனான புரிந்துணர்வும் நட்புமே உண்மையான ஜனநாயகத்திற்கான வழியாக இருக்கும். சிலர் நம்புவது போல் TULF _ LTTE உடன்பாடு தமிழ் சமூகத்திற்கு நன்மையாக முடியாது. மாறாக இப்போது உள்ள உட்குழு மோதலை தூண்டுவதாகவே இருக்கும்.

கொன்ஸ்: இப்போதுள்ள இலங்கை நிலைமையை கருத்திற்கொண்டு புலிகளுக்கு என்ன ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்கள்?

அமீர்: எங்களுடைய நண்பர்கள் யார்? எதிரிகள் யார் என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவின் எதிர்ப்புடன் எங்களால் எதனையும் சாதிக்கவியலாது என்ற யதார்த்தத்தை புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த அடிப்படையில் புலிகள் இந்திய அரசுடன் ஒரு புரிந்துணர்விற்கு வரவேண்டும். ☑




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஐதீகங்களுக்கும் பிரச்சாரங்களுக்கும் மத்தியில்

# தமிழர்களின் பார்வைக்கும் மீளாய்வுக்குமான நேரம்



எஸ் ரட்னஜீவன் கூல்

Scholar Rescue Fund Fellow, Institute of International Education, New York, NY Drexel University, Philadelphia and University of Jaffna, Sri Lanka

1970ம் ஆண்டு மே மாதம் புதிய ஐக்கிய முன்னணி அரசு பதவிக்கு வந்த சிறிது காலத்தில் பல்கலைக்கழக முடிவுகள் வெளியாகின. இவை பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் பிரிவின் முடிவுகளாகும். வழமையாக 150 இடங்களின் வெற்றிடத்திற்கு தமிழர்களில் குறைந்தது 75 பேர் தெரிவு செய்யப்படுவார்கள். இந்தத் தடவை சற்று வித்தியாசமாகவே இருந்தது. 103 தமிழ் மொழி மூல மாணவர்களும், 30 சிங்கள மொழி மூல மாணவர்களும் ஏனையோர் ஆங்கில மொழி மூல மாணவர்களும் தெரிவானார்கள். இதன் காரணமாக மிக அதிக அளவிலான பிரச்சாரங்கள் தெற்கில் முடுக்கி விடப்பட்டதால் நுழைவு தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது.

இதுவே மாணவர் பேரவை தோற்றுவதற்குக் காரணமாக அமைந்தது. இக்காலகட்டத்தில் ஜி. ஜி, அல்பிரட் துரையப்பா, பொலீஸ் அதிபர் ஆகியோர் அரசின் கையாட்கள் எனவும், துரோகிகள் எனவும், தமது தனிப்பட்ட நலன்களிலேயே குறியாகவுள்ளவர்கள் எனவும் தமிழரசுக் கட்சியின் மத்தியிலும், குறிப்பாக மாணவர் பேரவை மத்தியிலும் கருத்துக்கள் நிலவின.

ஆயினும் அல்பிரட் துரையப்பாவிற்கு யாழ்ப்பாணத்தில் கணிசமான செல்வாக்கு இருந்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியை யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதற்குப் பெரும் உதவி புரிந்தார். யாழ். நகர வளர்ச்சிக்கு அவரது பணி அளப்பரியது. தமிழரசுக் கட்சி அந் நகரத்தின் பகுதிக்குப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதிலும் அப்பகுதி மக்களின் அன்றாட பிரச்சனைகளுக்கு எதுவுமே செய்யாமல் தமிழர்களின் சுதந்திரம் குறித்து பெரும் வாய் வீரமே பேசினார்கள். அப்பகுதிக்கான நவீன சந்தை, தண்ணீர் குழாய் வசதிகள் என்பன அவரின் செயற்பாடுகளாகும்.


அப்போது தேசியவாதிகளின் மனங்களின் தன்மை மிகவும் வித்தியாசமாகக் காணப்பட்ட வித்தியாசமான காலகட்டம் அது. பாராளுமன்றத்தில் மக்களின் விடுதலைக்காக அடிக்கடி பேசி தமிழ் மக்களின் சுதந்திரம் குறித்து அடுக்கடுக்காக பேசிய போதிலும் அதே மாதிரியான அவலத்தில் வாழ்ந்த பாலஸ்தீன மக்களுக்காக மிகச் சிறிய அளவிலேயே கவலைகள் வெளிப்படுத்தப்பட்டன. திரு. வி. என் . நவரத்தினம் சிறந்த கனவான். இஸ்ரேல் நாட்டிற்கு ஆதரவாக தமிழரசுக் கட்சியின் சார்பில் பேருரை வழங்கவதற்காக அவர் பென்சில்வேனியாவிற்கு வந்திருந்தார். அவருடன் நானும் உடன் சென்றேன். மாணவர் பேரவையை உருவாக்கிய அரியம் மற்றும் அன்று மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு இன்று விரக்தியில் வெளிநாட்டில் வாழ்ந்து வரும் சத்தியசீலன் போன்றோர் அன்று இஸ்ரேலுடன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலமாகிய தலைவர் அ அமிர்தலிங்கம் அவர்களின் 80வது பிறந்த தினத்தையொட்டி இடம்பெற்ற நினைவு நிகழ்வில் கலாநிதி ரட்ணஜீவன் கூல் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்பட்டு உள்ளது. முழுமையான உரையை ஆங்கிலத்திலும் தமிழிலும் www.thesamnet.com இணயத்தளத்தில் பார்க்கலாம். தவிகூ யின் லண்டன் கிளையின் தலைவர் டொக்டர் நிக்கலஸ்பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தவிகூ இன் தற்போதைய தலைவர் வி அனந்தசங்கரியும் கலந்துகொண்டார். பல்வேறு அரசியல் பின்னணிகளில் இருந்தும் 200க்கும் மேற்பட்டவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனது கணிப்பின்படி இலங்கைத் தமிழர் தொகை 5.5 சதவீதமாகும். மொத்தத் தமிழர் தொகை 11.2 சதவீதமாகும்.

இலங்கை அரசின் பேச்சாளரான அமைச்சர் ரம்புக்காவெல இன் கருத்துப்படி மேற்கு மாகாணத்தில் தற்போது 39 சதவீதம் தமிழர்கள் எனக் குறிப்பிடுகிறார். 2001ம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பின் போது மேற்கு மாகாணத்தின் மாவட்டங்க ளான களுத்துறை, கம்பகா, கொழும்பு ஆகிய பகுதிகளில் 387,043 பேர் தமிழர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இத்தொகை 39 சதவீதமெனில் இலங்கை முழுவதிலும் வாழும் தமிழர் தொகை 992,417 என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். அவ்வாறானால் மொத்த சனத் தொகையில் 10 சதவீதமானவர்களே தமிழர்களாகும். வெளி நாடுகளில் வாழும் தமிழர்களையும், தமிழ்ப் பகுதிகளில் அரசு விநியோகிக்கும் கூப்பன் தொகையையும் அடிப்படையாக வைத்துக் கணக்கிட்டால் 1948 இல் இருந்த தொகையின் அரைப் பங்காக தற்போது தமிழர் தொகை உள்ளது.

மிக நெருங்கிய உறவை வைத்திருந்து, அங்கு சென்று பெருந்தொகையான சஞ்சிகைகளுடன் வந்திருந்தனர். யாழ்ப்பாணத்தை விவசாயத்தில் முன்னேற்றுவது குறித்து பேசினார்கள். அன்றைய காலகட்டத்தில் இஸ்ரேலை நாம் மிகவும் நேசித்தோம். நாம் விடுதலையை நேசிப்பவர்கள். எனவே நாம் பாலஸ்தீனர்களையே உண்மையில் ஆதரித்திருக்க வேண்டும். ஆனால் பரந்த மத்திய கிழக்கில் மிகச் சிறிய நாடாக உள்ள இஸ்ரேல் எவ்வளவு பலமுள்ள நாடாக உள்ளது என்பது குறித்தே எமது கவனங்கள் சென்றன.

இன்று தமிழர்களாகிய நாம் மிகப் பெரிய ஆபத்தில் உள்ளோம். எமது இருப்புக் குறித்த கேள்விகள் பல எழுகின்றன. இலங்கையில் பாரம்பரியமாக வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கையும், மலையகத் தமிழர்களின் எண்ணிக்கையும் தனித்தனியே 11 சதவீதமென நான் சிறுவனாக இருந்தபோது கூறினார்கள். முஸ்லீம்கள் 7 சதவீதமெனவும், பறங்கியர், மலே இனத்தினர், சிங்களவர் உட்பட 69 சதவீதமென கூறப்பட்டது. சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் தற்போது மலையகத் தமிழர் 5.7 சதவீதமென குறிப்பிடப்படுகிறது.

இலங்கைத் தமிழர்களின் குடிசனமதிப்பு போர் காரணமாக 1981 முதல் எடுக்கப்படவில்லை. அரசின் உத்தியோகபூர்வமற்ற புள்ளி விபரங்கள் சனத்தொகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியைக் காட்ட வில்லை. இதன் மூலம் அரசு பாரிய இன அழிப்புக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்கிறது. வடக்கு கிழக்கு புள்ளிவிபரங்கள் இதன் காரணமாகவே தட்டிக் கழிக்கப்பட்டதாக உணர்கிறேன். பாராளுமன்றத்திற்கான தொகுதி ஒதுக்கீடுகள் மக்கள் குடித்தொகையையும் உள்ளடக்கியே மேற்கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே பல்கலைக்கழக அனுமதியும் வழங்கப்படுவதால் குடித்தொகையை அதிக அளவில் இருப்பதாகப் பேணுவது தேவையாகவும் அமைந்தது.

சமஷ்டிக் கோட்பாடுகளை நான் மிகவும் நம்புகிறேன். சமூகத்தின் சில தவறுகளுக்கு நானும் குற்றவாளி என்பதை ஏற்றுக் கொள்கிறேன். பொறியியலாளர்களுக்கு கோட்பாடுகள் குறித்த கல்வியைப் போதிப்பவன் என்ற வகையில், பிரச்சனைகள் தொடர்ச்சியாக ஏற்படும்போது அதனை ஆரம்பத்திலேயே தீர்ப்பது ஆரோக்கிமானது. தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் அது மேலும் பெரிதாகிறது என்பது எனது கருத்து.

## ஐந்து தவறான கணிப்புகள்

தமிழர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் என்ன? எவ்வாறான எதிர்பார்ப்புகள் எம்மை இந்த பாரதூரமான நிலைக்குக் கொண்டுவந்துள்ளன?

எமது இருப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுள்ள இந்த வரலாற்றின் இறுதித் தருணத்தில் தாமத மில்லாமல் எமது மத்தியில் காணப்படும் பிரச்சாரங் களினால் அள்ளுண்டு செல்லாமல் நேர்மையாக சிந்திக்க வேண்டிய வேளை இதுவாகும். எம் முன்னால் கவனத்திற்குரிய ஐந்து அம்சங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1. எமது பிரச்சாரங்களின் உண்மைத் தன்மையினை ஆய்வுக்குட்படுத்தாது செயற்படுதல்

2. எம்மோடு கருத்து முரண்பாடு கொள்பவர் களை துரோகிகளாக கருதுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

3. பிரதிநிதிகளாக செயற்படும் வெளிநாட்டுத் தமிழர்கள்

4. தமிழர் வரலாறு சரியானது, சிங்களவர் வரலாறு பிரச்சாரம்

5. தமிழர் ஒற்றைப் பரிமாணம் கொண்ட சமூகம்

## புதிய பாதை : மனித உரிமைக்கான பங்களிப்பு

நாம் மனிதர்களாக வாழவேண்டுமெனில் ஒருவரை ஒருவர் நிராகரிப்பதை நிறுத்த வேண்டும். கடந்த 30 வருடகால போராட்டம் எமது பிரச்சனைகளைத் தீர்க்க உதவவில்லை. பதிலாக உக்கிரப்படுத்தப்பட்டு உள்ளது. இதனை யாராலும் மறுக்க முடியுமா? நாம் எம்மை புதிய வழிக்குத் திருப்ப வேண்டும். அந்தப் புதிய வழி என்ன?

கௌரவிக்கப்படாத ஒப்பந்தங்களால் ஒத்துழைப்பு என்ற அணுகுமுறை தோல்வியாகியது. அரசினை தொடர்ந்தும் நம்புவோமாகில் நாம் எஞ்சியுள்ள வற்றையும் இழக்க நேரிடும். முஸ்லீம்களும் இதே வழியைப் பின்பற்றினார்கள். அரசுகள் தமக்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதினார்கள். மூதூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குடியேற்றங்களால் முஸ்லீம்கள் கவலை அடைந்துள்ள போதிலும் எதிர்க்க முடியாமல் உள்ளதாக அறிகிறேன். உள்ளூர் பாதுகாவலர்கள் (Home Guards) என்ற பெயரில் நியமிக்கப்பட்ட முஸ்லிம்கள் பலரை அரசு கைவிட்டுள்ளதாகவும், இவர்களை புலிகள் கவனிப்பதாகவும் கூறப்படுகிறது. ஒத்தழைத்தவர்களின் இறுதி முடிவு என்னவாகும் என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

அரசுக்கு ஒத்துழைப்பவர்கள் மிகவும் இக்கட்டான நிலையிலேயே உள்ளனர். கருணாவும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தொண்டமான் ஒத்துழைத்தார். இறுதியில் பறையா என அழைக்கப் பட்டார். இவ்வாறு அவமானப்படுவது மட்டுமல்ல மீளவும் மக்கள் மத்தியில் செல்ல முடியாத நிலையும் ஏற்பட்டு விடுகிறது.

அடுத்தது போர் என்பதும் பயன்படுத்தப்பட்டது. துப்பாக்கி அதிகாரம் மிக மோசமான விளைவுகளை எமக்குத் தந்துள்ளது. எமது மக்களைத் தாக்கினோம். எமது மக்களுடன் இணைந்து, எமது மொழியைப் பேசி, எமது நலன்களையும் பகிர்ந்து வாழ்ந்த முஸ்லீம் மக்களை வெட்கமில்லாமல் தாக்கினோம். போரும் எமக்குத் தோல்வியையே தந்துள்ளது. இந் நிலை இன்னும் சில காலம் தொடருமாயின் நாம்



மக்களாக வாழ முடியாத நிலையே ஏற்படும்.

அவ்வாறானால் மாற்று வழி என்ன? சர்வதேச சமூகத்தினை எமது பக்கம் திருப்புவதே ஒரே வழியாகும். குறிப்பாக இந்தியா இதில் ஈடுபடுமானால் இலங்கை அரசு தமிழர்களையும் சம உரிமை பெற்ற பிரஜைகளாக மதிக்க வழி எற்படும். இதற்கு எவை தடையாக உள்ளன? மனித உரிமை தொடர்பாக தமிழர்கள் மத்தியிலே காணப்படும் பங்களிப்பு அருகியுள்ளமையே எனப் பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஓர் பன்மைத்துவ சமூக அமைப்பை நோக்கி நகர்வதற்கு எமக்கு நிச்சயமாக சம்பந்தன், ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றோருடன் பிரபாகரனும் தேவைப்படுகிறார்கள்.

இதற்கு முதற்படியாக மனித உரிமைகளை மீறும் சகலரும் அம்பலப்படுத்தப்பட வேண்டும். புலிகள் மீது நம்பிக்கை கொண்டு இயங்குபவர்கள் எமது மக்களின் நலன் கருதி அவர் தனது பாதையை மாற்றி மனித உரிமைக்கு மதிப்பளிக்கவேண்டும் என வற்புறுத்தப்பட வேண்டும்.

பொறியியல்துறைப் பொருளதாரத்தை உதாரணத் திற்கு எடுத்தால்; சகல பாதுகாப்புகளும் உடைய உயர்தர மோட்டார் வண்டியை உற்பத்தி செய்ய முடியும். அது உச்ச விலையைக் கொண்டிருக்கும். அதனால் பெரும்பாலான மக்களால் அவற்றை வாங்க முடியாதுபோகும். எனவே ஓரளவு பாதுகாப்புக் கொண்ட, முக்கியமான அம்சங்களில் தொழில்நுட்ப பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்வதே உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் உகந்தாக இருக்கும்.

அதே போன்றே அரசியலிலும், நாம் எமக்கென பூரண அதிகாரம் கொண்ட தனி அரசை உருவாக்குவது சிறந்ததாக இருக்கலாம். ஆனால் அதற்காக நாம் உழைப்போமானால் நாம் எம்மை மிக அதிக அளவில் இழந்து இலக்கை அடையாமலே இல்லாமலே போய்விடலாம். எனவே நியாயமான அதிகாரங்களுடன் நிலம், பொலீஸ் தொடர்பான விடயங்களிலும் போதுமான பாதுகாப்பு எற்பாடுகளைக் கொண்ட தீர்வுகள் சர்வதேச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டால் அது இரண்டாவது சிறந்த தெரிவாக நடைமுறைச் சாத்தியமானதாக அமையும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> "ஒரு புறத்தில் சாதி என்பது கற்பனை எனக் கூறிக் கொண்டு மறு புறத்தில் அவர்களைக் கீழே அமுக்கி வைக்க முடியாததால் போலியான விதத்தில் வெள்ளாளர்களாக உயர்த்தி வைப்பதன் மூலம் சாதியத்தைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர்."

பேராசிரியர் ரட்ணஜீவன் கூல்

# தமிழரின் ஒற்றைப்பரிமாணம்?

இலங்கைத் தமிழர்களாகிய நாம் ஒற்றைப் பரிமாணம் கொண்டவர்களாக என்றும் இருந்ததும் இல்லை. இருப்போம் என்பதும் சந்தேகமே. இது மனித சமூகத்தின் இயல்பு நிலை சம்பந்தப்பட்டது.

சிங்கள மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்களே இலங்கையை ஆள்கிறார்கள். முக்கியமான முடிவுகளின் வெளிப்பாடுகளை அவர்களே தீர்மானிக்கிறார்கள். இவை எமது உறவு சம்பந்தப்பட்டவை என்பதை அவர்களும், தமிழர்களாகிய நாமும் அறிவோம். இவர்கள் ஏன் போராடுகிறார்கள்? என பல சிங்களக் கல்விமான்கள் அடிக்கடி ஆச்சரியத்துடன் கேட்பார்கள். புலிகளின் தோற்றத்தின் பின்னரே தமிழர்களுக்கு பிரச்சனைகள் இருப்பதாக பல சிங்கள கல்விமான்கள் என்னிடம் கூறியுள்ளனர்.

அவர்களைப் பொறுத்தவரையில் தமது ஆட்சி யாளர்கள் எந்தவிதமான பிரச்சனையும் இல்லாமல் கடந்த காலங்களில் தமிழர்களை நன்கு நடத்தி இருப்பதாகவே கருதுகின்றனர். தென்னாபிரிக்க வெள்ளையர்கள் பலரும் தமது ஆட்சியாளர்கள் கறுப்பர்களை நன்கு நடத்தியதாகவே நம்பினார்கள். தமது குடியேற்ற ஆட்சிக்குட்பட்ட மக்களுக்கு தாம் சிறந்த நாகரிகத்தைப் போதித்ததாக பிரித்தானியர்கள் நம்பினார்கள்.

இதேபோன்று தமது நுகத்தடியில் வாழுகின்ற தமிழ் மக்கள் சுமைகளோடு வாழ்வதாக தமிழ் ஆட்சியாளர்கள் எப்போதாவது உணர்ந்தார்களா? அதற்கான சாத்தியமுண்டா?

தமிழ்ச் சமூகம் மாபியா போன்ற வெள்ளாள சமூகத்தினரால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பதை மிகவும் ஆணித்தரமாக முன்வைக்க விரும்புகிறேன். புலிகளின் தலைமை அச்சமூகத்தைச் சார்ந்ததாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதன் அறிவுத்தளம் வெள்ளாள சமூகத்திடம் தான் உள்ளது. றோமன் கத்தோலிக்கரும், கரையோர மக்களும் கீழ்ச் சாதியினர் என நியூயோர்க் இலங்கைத் தமிழ்ச் சங்கம் தனது வெளியீட்டில் தெரிவித்திருந்தது.

தற்போது வல்வெட்டித்துறையில் வாழும் மக்களை உயர்ந்த அரச வம்ச சாதியாகக் காட்டும் கட்டுரைகள் வெளியாகி வருகின்றன. தலைமைத்துவத்தை அங்கீகரிக்கு முன் சாதியை உயர்ந்த அந்தஸ்திற்கு எடுத்துச் செல்வது அவசியத் தேவையாகியுள்ளது. நாவலரை உயர்ந்த இந்துவாக உயர்தியதன் பின்னரே அவர் மொழிபெயர்த்த பைபிளின் சிறப்பு விபரிக்கப்பட்டது. உயர்ந்த சாதியினரால்தான் உயர்ந்த கருத்துக்கள் முன்வைக்கப்படலாம் என்பதை நிருபித்த பின்னரே பாலசிங்கம் மாமனிதராக்கப்பட்டார். இது வெள்ளாள சமூகத்தினரால் ஈழப் பிரச்சாரத்தில் முன்வைக்கப்படும் தத்துவார்த்த விளக்கங்களாகும். போராட்டத்தில் இறப்பவர்களுக்கு ஓர் சமூக அந்தஸ்தினை வழங்க எடுக்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடாகும்.

புலிகளில் வெள்ளாளர் அல்லாதோர் உள்ளனர். அவர்கள் அதிகாரத்தின் உச்சநிலையில் உள்ளார்கள் என்பதும் உண்மையே. முதலில் உயர் சாதியர் யார்? என்பதனை விளக்கினால் மட்டுமே அதிகாரத்தில் இருப்பவரை அங்கீகரிப்பது நியாயப் படுத்தப்பட முடியும். அதுவரை இவை தொடரும். இன்னும் இரண்டு தலைமுறை சென்றால் அவர்களும் வெள்ளாளர் அல்லது சைத்திரியர் ஆகிவிடுவர்.

கடந்த 2007 ஆகஸ்ட் 6ம் திகதி புலிகளின் Tamilnet என்ற இணையத் தளத்தில் பறையர் சமூகத்தினர் என்போர் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பில் மிகவும் சிறப்பு மிக்க வழித் தோன்றல்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த இணையத் தளத்தின் ஆசிரியர்களை பறையர்கள் என அழைத்தால் மகிழ்ச்சி அடைவார்களா என்பது சந்தேகமே. இதுவே வெள்ளாள சமூகத்தின் போலித்தனமாகும். ஒரு புறத்தில் சாதி என்பது கற்பனை எனக் கூறிக் கொண்டு மறு புறத்தில் அவர்களைக் கீழே அமுக்கி வைக்க முடியாததால் போலியான விதத்தில் வெள்ளாளர்களாக உயர்த்தி வைப்பதன் மூலம் சாதியத்தைப் பாதுகாக்க முயற்சிக்கின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



அமுக்கி வைக்க முடியாவிடில் தெரிவு செய்து தமது மட்டத்தில் தற்காலிகமாக வைத்திருத்தலாகும்.

வெள்ளாள சாதியினரின் அதிகார முன்னிலைப் படுத்தலும், மேற்குலக நாடுகளில் புதிதாகத் தோன்றியள்ள பணக்கார வர்க்கமும் இணைந்து புதிய தொழிலில் செயற்படுகின்றன. இவர்கள் அவர்களது குடும்ப வரலாறுகளுக்கு புதிய விளக்கம் அளிக்கின்றனர். பழைய அரசர்களின் காலத்திற்குச் சென்று ஆதாரங்களைத் திரட்டி விளக்கம் அளிக்கின்றனர். பண்பாடான கலாச்சாரத் தினை அவர்களது தனிப்பட்ட வாழ்க்கையில் கொண்டிராத பலர் சிறந்த பண்பாட்டு குடும்ப மரத்தின் வாரிசுகளாக விபரிக்கப்படும் வரலாறுகள் தற்போது எழுதப்படுகின்றன. றோமன் கத்தோலிக்கர் என்போர் கீழ் சாதியர் என வர்ணித்த தமிழ்ச் சங்கம் வெளிநாட்டில் வாழும் இன்னொரு றோமன் கத்தோலிக்க குடும்பத்தினரை ஆரிய சக்கரவர்த்தியின் வழித்தோன்றலாக வர்ணித்து எழுதியுள்ளது. தமிழ்ச் சமூகத்தின் தலைவிதி இவ்வாறான மடைத்தனமான சமூகப் பிரக்ஞையே இல்லாத வெளிநாட்டுத் தமிழர்களின் கையில் சிக்கிச் சீரழிவது நம்பகரமானதாக அமையுமா?

ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் புலிகளின் ஆலோசனையாளர்கள் என அழைக்கப்படுவோர் பலரும் வெள்ளாளர்களே. இந்த உண்மையை இவர்களால் மறைக்க முடியாது. சட்ட ஆலோசகர்களாக பேச்சு வார்த்தைக்குச் சென்றவர்கள் வெள்ளாளர் அல்லாதோர் என்ன செய்யவேண்டுமெனக் கூறுவார்கள். இவர்கள் ஒரு காலத்தில் எதிரிகளுடன் இணைந்து செயற்பட்டவர்கள். இவர்கள் வெள்ளாள குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் என்பதை விட தாம் அவ்வாறான குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எனக் கூறியே வாழ்ந்த பின்னணியைக் கொண்டவர்கள்.

இன்னொரு அம்சத்தைப் பார்ப்போம். தமிழ் தலைமையைப் பார்ப்போம். யாழ்ப்பாணத் தலைமையினால் சகல தமிழரையும் முன்னெடுத்துச் செல்ல முடியுமா? எமது கடந்த கால தமிழ்த் தலைமைகள் ஏன் மக்களால் தோற்கடிக்கப்படார்கள் எனபதை இன்னமும் புரிந்து கொள்ள முடியாமல் சிங்களத் தலைமை அவதிப்படுவது போல் இன்றைய தமிழ்த் தலைமைகளால் தொடர்ந்து செல்ல முடியுமா? கிழக்கு மாகாண மக்களின் கணிசமான ஆதரவு இல்லாமல் கருணாவால் இவ்வளவு காலத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியுமா? என கிழக்குப் பல்கலைக்கழக கல்விமான்களால் உறுதிபடக் கூற முடியவில்லை. மண்ணுக்குள் தலையைப் புதைத்து வைத்துக் கொண்டு நீண்ட காலம் இந்த உண்மையை மறைக்க முடியாது.

சிங்கள ஒடுக்குமுறையிலிருந்தும், விஸ்தரிப்பில் இருந்தும் வெவ்வேறு குழுக்களாக உள்ள மக்கள் வெவ்வேறு விதங்களில் போராடி வருகின்றனர். கிழக்கு மாகாண மக்கள் யாழ். மேலாதிக்கத்தில் இருந்தும் தம்மை விடுவிக்க முயற்சிக்கின்றனர். கீழ்சாதி மக்கள் வெள்ளாள அதிக்கத்திலிருந்து விடுதலை பெற போராடுகின்றனர். சிங்கள, தமிழ் மேலாதிக்கத்திற்கு இடையில் நசுங்கியுள்ள முஸ்லீம் மக்கள் தம்மை விடுவிக்கப் போராடுகின்றனர். தமிழ் புரட்டஸ்தாந்து சமூகத்தினர் இன்றுள்ள புதிய ஒழுங்கிலிருந்தும் தம்மை விடுவிக்க அவுஸ்ரேலியா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர். மேற்கு நாடுகளில் தம்முடைய ஸ்தானத்தைப் பலப்படுத்துவதும் ஒரு போராட்டம்தான்.

முஸ்லீம் மக்கள் சம்பந்தப்பட்ட எமது பிரச்சாரத்தைப் பார்ப்போம். 27 சதவீதமான தமிழர்கள் வாழ்வதாக சேர். பொன். இராமநாதன் முஸ்லீம் மக்களையும் தமிழ் பேசும் மக்கள் எனக் கூறி இணைத்தார். சேர். ராசிக் பரீத், மற்றும் முஸ்லீம் தலைவர்கள் தம்மைத் தமிழர்கள் என அழைப்பதை விரும்பவில்லை. தமிழரசுக் கட்சி ஒரு வகையில் பாலமாகச் செயற்பட்டு அவர்களது வாக்குகளையும் பெற்றது. எம்மோடு வாழத் தகுதி அற்றவர்கள் என்பதால் அவர்கள் துரத்தப்பட்டதால் இவை யாவும் தற்போது பூச்சியத்திற்கு வந்துள்ளன. இந்நிலையில் நாம் மொத்த தமிழ் மக்களுக்காகவும் பேசத் தகுதி உள்ளவர்களா?

70 களில் மலையக மக்களை வன்னியில் வந்து குடியேறுமாறு உற்சாகப்படுத்தப்பட்டது. இதனால் இவர்கள் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையே பாதுகாப்பு கேடயமாக இருப்பார்கள் எனக் கருதினார்கள். மலையத்திலிருந்த பிச்சைக்காரர்கள் யாழ்ப்பாண நகரத்திற்கு வந்தபோது எமது சகோதர வாஞ்சை வேறு விதமாக இருந்தது.

தமிழ்பேசும் மக்களின் போராட்டம் என்பது மிகவும் விசாலமானது. சிங்கள பௌத்த மேலாதிக்கத்திற்கு எதிராக போராடுவது என்பது சகல சிறுபான்மையினரினதும் ஆதங்கங்களின் கூட்டாக இருத்தல் வேண்டும். ☑

www.tamilarangam.net



Observer Research Foundation (ORF) Chennai Chapter நிறுவனத்தினால் 21.08.2007ல் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையின் சுருக்கமே இது. இவ்வாய்வுக்கட்டுரையின் முழுமையையும் www.thesamnet.com இணையத்தளத்தில் பார்க்கலாம்.

### இந்தியா, தமிழ் பேசும் இலங்கையர், & சிங்கள மக்கள் (சிறீலங்கா)

# முத்தரப்பு ஒப்பந்தமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

இந்தியாவின் கண்ணீர்த்துளி போலமைந்த இலங்கைத் தீவின் தீர்க்கப்படாத இனப்பிரச்சனைக்கு முடிவு காண செய்யப்பட்ட முயற்சிகள் சரித்திரத்தில் குப்பைக் கூட்டாக காணப்படுகிறது. இவற்றை உன்னிப்பாகக் கவனிப்போர் ஆங்கிலேய காலனித்துவ காலம் சமுதாய கட்டுவளர்ப்பில், குறிப்பாக 'தேசம்' எனும் கட்டுவளர்ப்பில், எவ்வாறு இலங்கையிலும் இந்தியாவிலும் பிறிதுபட்டுக் கிடக்கின்றது என்பதை உணர்ந்து கொள்வர். அதிலும், 'ஒன்றிணைப்பு' (unification) என்பதில் அவை வெறும் தோற்றத்தில் மட்டுமின்றி உள்ளடக்கத்திலும் பாரிய அளவில் மாறுபட்டவை என்பதும் இலகுவில் புரியும்.

இதற்கு எதிர்மாறாக, இலங்கையின் 'ஒன்றிணைப்புக்கான' அநுபவங்கள் யாவுமே சிங்கள மக்கள் பெயரில் 12ம் நூற்றாண்டளவில் பௌத்த பிக்குகளால் எழுதப்பட்ட 'மகாவம்சம்' எனும் சிங்க (lion) அரசர்களின் வம்சாவழிக் கட்டுக் கதையிலேயே தங்கியுள்ளது. அது சிங்கள - பௌத்த சோவனிச வாதமாக மாறி இலங்கையை பூராக சிங்கள - பௌத்த மக்களுக்கே என சுவீகரித்துக் கொள்வதற்கும்; அச்சதியை முறியடிப்பதற்கான மற்றைய சமுதாயங்களின் போராட்டங்களுக்கு இடையிலான உறவுகளிலும் அமைந்தது.

இன்று இந்தியா தனது 60ம் சுதந்திர தினத்தை தன்னடக்கத்துடனும் அதேவேளை சுயநம்பிக்கையிலான எதிர்பார்புகளுடனும் கொண்டாடும்போது, அண்டை 'நாடுகளின்' நிலமைகளோ எதிர்மாறு.

மீண்டும் மறுமலர்ச்சி காணும் இந்தியா, தோல்வி தழுவிய நாடுகளால் சூழப்பட்டுள்ளபோது தனது வெளிநாட்டு கொள்கைதனை வெறும் 'கேந்திர', 'பொருளாதார' தேவைகள் என்ற ரீதியில் மட்டும் அமைத்திட முடியாது. அவை, பிராந்தியத்தின் சமூக - பொருளாதார ஸ்திரம், தனிமனிதனதும் சமூகங்களதும் அரசியற் - பொருளாதார பலமாக்கம் (empowerment) என்ற கோட்பாடுகளை உள்ளடக்கம் கொண்ட பிராந்திய பொறுப்புணர்வாகவும் இருக்க வேண்டும்.

அமைப்பு ரீதியிலோ, இயங்கியல் நடைமுறை ரீதியிலோ சிறீலங்கா என்ற அரசோ, விடுதலைப் புலிகளோ அடித்தளத்தில் தோல்வி கண்ட அமைப்புகள் என்பதில் ஐயமில்லை.

சிறீலங்கா என்ற அரச ஸ்தாபனத்துள் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எவ்விதமான உடமைகளோ, ஏன், சாதாரண மனித உரிமைகள் என்ற ரீதியிலான உரித்துக்களோ இல்லை. சமூகத்தின் தனிமனிதர்களின் அடித்தள ஜனநாயக உரிமைகளும், அவற்றைத் தாங்கும் அமைப்பு வடிவங்களும் சிதைந்து போய்விட்டன. இவற்றினாலேயே, இலங்கையின் இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான நிஜமான தீர்வை நாடும் அறிவாளிகள் சிந்தனாவாதிகள், அவர்கள் எச்சமூகத்தவராயினும் சிறீலங்காவின் அரச அமைப்பினையே (state's structure) பிழையாகக் காண்கின்றனர்.

சிங்களவர் - தமிழர் என்ற ரீதியிலான இருதரப்பு ஒப்பந்தங்களோ பல. அவற்றினை நிர்ணையம் செய்வதற்கான சக்தி அங்கில்லாமையால் தோல்விகளும் அதே அளவு. பண்டா - செல்வா, டட்லி - செல்வா என தமிழரது ராணுவப் போராட்டத்துக்கு முதலிலும், பிரேமதாசா, சந்திரிக்கா, ரணில் விக்ரமசிங்கா போன்றோருடன் புலிகள் ஏற்படுத்திக் கொண்ட, ஒஸ்லோ ஒப்பந்தம் உட்பட பல இரகசிய உடன்பாடுகளும் இவ்வகையுள் அடங்குகின்றன.

இந்தியா - சிறீலங்கா என்றளவிலான இருதரப்பு ஒப்பந்தங்களும் பிரயோசனம் இல்லாது போயிற்று. அதன் தோல்விக்கான காரணத்தை உடன் கண்டிடலாம்: 'அதனை சொந்தம் கொண்டாடிட யாருமே இருக்கவில்லை'. சிறீலங்காவோ அதனை வெறுத்தது, இந்தியருக்கு தக்க பாடத்தைக் கற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்க தக்க தருணமாகவே அதனைக் கண்டது. புலிகளுக்கோ அதனைத் திணித்த விதமோ இந்தியா கையாண்ட முறையோ, அதனுள் அடங்கிய சிறு எழுத்துக்களின் விபரங்களோ வெறுப்பான விவகாரமாகவே அமைந்தது. இவற்றினால் எழுந்ததே பிரேமதாசா - புலிகள் உடன்பாடு, தொடர்ந்து இந்திய அமைதிப் படையினரது வெளியேற்றம். டெல்லியிலோ, இலங்கைப் பிரச்சனை பாக்கிஸ்தான், நேபாளம், வங்காளதேசம் என்ற ஒப்பீட்டில் முக்கியமற்றது. ராஜிவ் காந்தியின் படுகொலையின் பின்னணியில்கூட முக்கியத்துவம் பெறாதது.

ஆனால், ராஜிவின் கொலை எவ்வாறு சிங்கள அரசின் கைசிக்கி, தமிழ் மக்களது போராட்டத்துக்கு பாதமான நிலமையை எங்கெல்லாம் உருவாக்கி உள்ளது என்பதை இன்று நாம் கண்முன்னே கற்றவண்ணம் உள்ளோம்.

இருந்தும், மாற்றாருக்காக ஏதாவது உடன்பாடுக ளில் இணங்குவது என்பதன் தவறினை, அவற்றினா லான விளைவுகளை மட்டும் கொண்டு அனுகாது, அதன் உள்ளடக்கத்தில் இருந்தே நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியா இப்பிழையை முதற் தடவையாகச் செய்யவில்லை. சிறீமா - சாஸ்திரி, சிறீமா - காந்தி ஒப்பந்தங்கள் என்ற பேரில், இந்தியத் தமிழர்களுடன்கூட (தமிழ்நாட்டு) ஒருவார்த்தையும் பேசாது, இலங்கைத் தமிழர்களான மலையகத்தவரை பல்லாயிரக் கணக்கில் நாடு கடத்துவதால் ஏற்பட்ட விளைவுகளை இந்தியா புரிந்திருக்கவில்லை. அவை எவ்வாறு இலங்கைத் தமிழர்களது ஸ்திரத்தினைச் சீரழித்து, சிங்கள அரசினை மேலும் தனது பிழையான பாதையில் உந்தி பெரும்பான்மைவாத (majoritianism) பயங்கரத்துள் தமிழ் பேசுவோர் யாவரையும் தள்ளிவிட்டுள்ளது என்பதை நாம் அறிவோம்.

இந்தியா - தமிழர் என்றமைந்த உடன்பாடுகளால் அழிவின்றி வேறெதுவுமில்லை தமிழ் மக்களுக்கு. தமிழர் பிரதிநிதிகள் என பொதுவாகவே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆறு அமைப்புகளை திம்புப் பேச்சு வார்த்தைக்கு கூட்டிச் சென்ற இந்தியா, பெங்ளூர் பேச்சுவார்த்தைக்கு புலிகளை மட்டுமே கூட்டிச் சென்றமை மற்றைய அமைப்புகளுக்கு பெரும் சமிகையாகவும் பிற்பாட்டில் தமிழரின் உயிச் சேதமுமாகிற்று. ஈரோஸ் தமிழர்களது 'தேசிய விடுதலைப் போரின் தலைமை' என வாழ்த்தி வழி அனுப்பிற்று. சில மாதங்களிலேயே ரெலோ அமைப்பு வழித்துக் கொய்யப்பட்டது.

அதன்பின் நடந்த டெல்லிப் பேச்சுவார்த்தை, நடைமுறையில் இந்தியா - புலிகள் என்ற இரு தரப்பு உடன்பாடுமாகி, ஈற்றில் இந்தோ - சிறீலங்கா ஒப்பந்தமுமானது. அதன் பின்னமைந்த இந்திய - புலிகள் போர்பற்றி அறிவோம். தொடர்ந்து, பெயருக்கேற்றவாறு இயங்கியலில் இல்லாத வட - கிழக்கு மாநில ஆட்சிக்கென EPRLF அமைப்புடன் ஏற்படுத்தப்பட்ட இருதரப்பு உடன்பாடு அவ்வமைப்பினை அடியொட்ட இல்லாது போக்கிட வழி செய்தது.

இந்த ஒப்பந்தங்கள் உடன்பாடுகளின் தோல்வி யின் அடித் தளம்தான் என்ன?

1. அவை சர்வதேசிய பல்பொருள் ஒற்றுமைப் பாடு கொண்ட கோட்பாடுகளுள் அமையவில்லை.

2. அவை சர்ச்சையிலுள்ள சகலரதும் ஒத்து ழைப்பும் இல்லாது செய்யப்பட்டவை.

3. அவை ஒளிவு மறைவாக, எதுவித மக்கள் பரிசீலனைகளும் இல்லாது ஒப்பேறியவை.

4. அவற்றினை சொந்தம் கொண்டாடுபவர் மிகவும் சிலர்.

இலங்கையில் நிலவும் உள்நாட்டு யுத்தமானது முத்தரப்பினரது ஸ்தரத்துக்கும் மட்டுமின்றி பிராந்திய ஸ்தரத்திற்கும் பாதகமானது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். ஆகவேதான் ஒருவரை ஒருவர் ஏமாற்றாது முத்தரப்பு ஒப்பந்தமே உண்மையானது என்பதை யாவரும் ஒத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியா, இலங்கைத் தீர்வில் ஒரு பங்காளி ஆவதுடன் அதனை நடைமுறையில் ஒப்பேற்றி வைக்கும் உந்து சக்தியாகவும், இனங்களிடையே மட்டுமின்றி அவற்றிடையே உள்ள சமூகங்கயிடையேயும்கூட உறவுகளை பலப்படுத்த உதவிட வேண்டும். அமரிக்கர் இரண்டாம் மகாயுத்தத்தின் பின்னர் ஐரோப்பியாவுக்கு வழங்கிய ''மாஷல்'' திட்டம் போன்ற பொருளாதார உதவியையும் முன்வைக்க வேண்டும்.

இவ்வாறு இந்திய அரசியற் - பொருளாதாரத்தின் பின்னணியில் அமையும் தீர்வானது, இலங்கை வாழ் சகல சமூகங்களுக்கும் நம்பிக்கை தருவதாக அமையும். இந்நிலைப்பாட்டில், இந்தியா ஒரு பிராந்திய ஆதிக்க சக்தியாக அண்டை நாடுகள் கணிப்பினும், மனித முன்னேற்றத்துக்கு உதவி தரும் ஊற்றாக அமைவதனால் அண்மையில் தான் இலங்கையில் இழந்துவிட்ட கைபிடிகளை, ஆயிரம் மறைமுக சதிகளூடவும் சிங்கள தேசத்துடனான உடன்பாடுகளூடாகவும் பெற முடியாதவற்றை, இலகு வில் எய்திடலாம்.

தமிழர்கள் திரண்கொண்ட சுயஅழுத்தம் கொண்ட சமூதாயமாக இல்லாது வெறும் சிறுபாண்மையராக மாற்றிடும் வகையில் இலங்கைத் தீவினில் சிங்கள மக்களது ஆதிக்கம் மட்டுமே என ஊர்ஜிதம் செய்யப்படுவதால் இந்தியாவினது எதிர்கால எதிர் பார்ப்புகளுக்கு என்ன இலாபம்?

இக்கேள்விதனை எமது சிங்களச் சகோதரர்களிட மும் கேட்டிடுவதில் தப்பில்லை. தமது எதிர் காலத்துக்காகவாவது சிங்களப் பாரம்பரியத்தை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரித்திரப் பாதாளத்தில் தள்ளிவிடக் கூடாது என்ற மனோவியல் ஓட்டத்தை புரிந்தவர்களாக தமது பெயரில் உள்ள அரச அமைப்பினை மாற்றி ஜனநாயகப் புனருத்தானம் செய்ய சிங்கள மக்கள் முன்வர வேண்டும்.

இலங்கையில் உள்ள சகல சமூகங்களும், குறிப்பாக தமிழ்ச் சமூகங்கள் தம்மை ஜனநாயக வழிக்கு ஈடுபடுத்தி, மனுதாய சமூக அமைப்புகளை (civil society) மீண்டும் நிலை கொள்ள வழி செய்து தர வேண்டும் என்பதாகும்.

ஆனால், சிங்கள அரசின் அடக்கு - ஒடுக்கு முறைக்கும் தம்முள்ளே காணும் ஆயுதக் குழுக்களுக் கும் தம்வலுவை இழந்துவிட்ட தமிழர்களையும், சிங்கள சோவனிசத்துக்கே அடிமையாகிவிட்ட சிங்கள வரையும் கொண்ட பிரதேசத்தில் மனுதாய சமூக அமைப்புகள் மீண்டும் துளிர்விட வேண்டுமாயின் அதற்கும் இந்தியாவே வழிசெய்தல் வேண்டும் என்பதும் இயங்கியல் நியதி. இவ்விடயத்தில் 'சர்வதேசிய சமுதாயம்' என்ற முகப்பின் பின்னால் இந்தியா ஒளிந்து கொள்ள முடியாது.

இந்தியா மற்ற நாடுகளது உதவிகளுடன் இவ்விடயத்தில் முனைப்புக் கொடுத்து, கால அவகாசங்களுடன் அமைந்த படிமான கட்டங் களையும் முன்வைக்க வேண்டும். இதன் தொடர்ச்சியாக விரைவில் தமிழர்களிடையே ஒரு 'குறைந்தபட்ச கருத்தின் ஒருமைப்பாட்டினையும்' (minimum understanding) அவர்களது சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவம் தரக்கூடிய ஒரு 'கருத்தாக்கக் கூடத்தையும்' (Forum) தமிழர்கள் பெறக்கூடிய நிலைமையையும் தரவேண்டும்.

ASATiC யைப் பொறுத்தமட்டில் தமிழரிடையே, தமிழ் பேசுவோரிடையே ஒரு 'குறைந்தபட்ச கருத்து ஒருமைப்பாடு' அத்தியாவசியம் என்பதில் ஐயமே இல்லை. எனவே அதற்கொரு வழியை திறந்து வைக்க, அதன் பின் வழிகாட்டியாகவும் இருக்க இந்தியரின் முதுமையான அரசியல் தலைவரும், உலகத் தமிழரது இயற்கைத் தலைவருமான கலைஞர் கலாநிதி மு கருணாநிதி முன்வர வேண்டும் என பிரேரிக்கின்றோம். இவ்வாறமையும் இந்தியத் தலையீடு 'சகல தமிழ் அமைப்புகளின் மகாநாடாக' சென்னையில் இடம்பெறின் இலங்கைப் பிரச்சனையின் தீர்வுக்கான பாதையில் வெகு தூரத்தை ஆக்க பூர்வமாகக் கடந்திட உதவும்.

நாம் தேடும் தீர்வு சகல தமிழ்பேசும் (தமிழர்கள், இஸ்லாமியர், மலையகத்தவர்) சமூகங்களுக்கும் நீதிபகர்வதாக அமைய வேண்டும். நாம் இவர்களது சர்ச்சையானது இலங்கையின் அரச வடிவமைப்புடனானது என நிர்ணையம் செய்வதால் அதனது அடிப்படை மாற்றம் சகல சமூகங்களுக்கும் தீர்வாக அமையும் என்கிறோம்.

Observer Research Foundation (ORF) Chennai Chapter அமைப்பினால் கிழக்கு இலங்கை தொடர்பான கருத்தரங்கு 21.08.2007ல் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கருத்தரங்கில் இந்திய தேசிய பாதுகாப்புப் பிரிவு, இந்திய புலனாய்வுத்துறை நிறுவனமான றோ (RAW Research & Analytical Wing) மற்றும் ஏனைய இந்திய புலனாய்வு அமைப்புகளின் பிரதிநிதிகள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். இக்கருத்தரங்கில் இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் (இலங்கைப் புலனாய்வு பிரதிநிதிகள்), தெரிவு செய்யப்பட்ட இலங்கை, இந்தியப் பத்திரிகையாளர்கள், இந்தியாவில் உள்ள இலங்கைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். இச்சந்திப்பில் தற்போதைய ஈரோஸ் அமைப்பின் சார்பில் அதன் அதிமுக்கிய உறுப்பினரும் முன்னாள் ஈரோஸ் தலைவர் பாலகுமாருக்கு நெருங்கியவருமான ரவி சுந்தரலிங்கம் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்தார். இக்கருத்தரங்கின் தொடர்ச்சியாக அவரைத் தொடர்ந்து ஈரோஸிற்கு மிக நெருக்கமான பேராசிரியர் கணேசன் செப்ரம்பர் முற்பகுதியில் சென்னைக்கு விஜயம் செய்துள்ளார். இவரும் அங்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உள்ளார். ஈரோஸ் அமைப்பிற்கும் இந்திய புலனாய்வுத்துறைக்கும் இடையேயான உறவு இரகசியமான தொன்றல்ல. இவ்வாண்டு மார்ச் 24ல் ஈரோஸ் ஸ்தாபகர் ரட்ணசபாபதியின் ஞாபகார்த்த மாநாட்டில் றோ சந்திரன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அவ்வாறமையும் மகாநாடு காலத்தில் தமிழ் பேசுவோரது 'அரசியல் மன்றமாக' மாற வேண்டும் எனவும், அது சிங்கள, இந்திய அரசியல்வாதிகள் அமைப்புகளுடன் பேசி புரிந்துணர்வை ஏற்படுத்தும் தன்மையையும் பெறும் எனவும் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு ஒருவருடன் ஒருவரை தொடர்புபடுத்தி வரித்திடும் நடைமுறைத் திட்டம் ஒன்றினாலேயே 'சர்ச்சைப் பிராயச்சித்தம்' (conflict resolution) என்பதை அணுகமுடியும் என்கிறோம். இவை அனைதினதும் தாங்கு தூண்களாகவே 'முத்தரப்பு ஒப்பந்தம்' என்ற எமது அடித்தளத் திட்டத்தையும் முன்வைத்தோம்.

## சாரம்சம்:

1. இறுதித் தீர்வானது உறுதியாவதாயின் அது சிங்கள மக்கள் (சிறீலங்கா), தமிழ் பேசும் இலங்கையர், இந்தியா ஆகியோரிடையேயான முத்தரப்பு (Tripartite) ஒப்பந்தமாகவே அமையும்.

2. அவை இரு சர்வதேசிய மனுதர்ம நெறிகளுள் அமையும் பல சமூகங்களை உள்ளடக்கும் அரச வடிவமைப்பு, மனுதர்ம மனிதாபிமான சமூக நெறிப்பாடுகள்.

3. தீர்வுக்கான பாதை சிங்கள, தமிழ் பேசும் சமூகங்களது சகல அரசியல் தொகுதிகளையும் நடைமுறையில் உள்ளடக்கியதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம் வண்ணன்

# கொன்ஸ்ரன்ரைன் கூறும் ஜனநாயக வியாக்கியானம்



கொன்ஸ்ரன்ரைன்

கதை சொல்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தனி மரம் தோப்பாகாது என்று தத்துவார்த்தம் எழுதியிருக்கும் தேசம் இதழின் எழுத்தாளர், தோப்புக்களையெல்லாம் வெட்டிச் சாய்த்து சுடலைகளாக்கிய இனத்துரோகத்தை சுட்டிக் காட்டாமலே எழுத்துகளுக்குள் ஒளிந்து கொண்டது கண்டு சிரிப்புத்தான் வருகிறது. எங்கள் மக்கள், இருப்பிடம் விட்டு உலகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் வியாபித்து வேரூன்றி இருக்கிறார்கள். அவர்களின் சொந்த மண் வானம் பார்த்த பூமியாக வேட்டோசைகளிலும், கொலை ஓலங்களிலும் நிம்மதி தொலைத்துக் கிடக்கிறது.

புலம்பெயர்ந்து போன மக்களுக்குப் பொய்களையும், பொருந்தாத கற்பனைகளையும் நேரில் கண்டதான நெடுங் கதைகளோடு சொல்லிக் கொண்டு ஊடகங்கள் நடத்தும் வர்த்தக முதலைகள் ஏராளம். அதில் பேனை பிடித்துக் கிறுக்கத் தெரிந்தவரெல்லாம் ஆய்வாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் ஆகிப்போன கதையும் உண்டு. அப்படி ஒரு பிரகிருதிதான் தேசம் இதழ் 31இல் 24ஆம் பக்கத்தில் எழுதியிருக்கும் கொன்ஸ்ரன்ரைன் என்பவரும்.

புலிக்குப் பயந்து பரதேசம் போன இவர்களெல்லாம் மக்கள் பற்றியும் மக்கள் பணியாளர்கள் பற்றியும் எழுத அருகதை அற்றவர்கள். ஆயினும் அவர்கள் கருத்துக்களை மதிப்போம்.

அமைச்சர் டக்ளஸ் லண்டன் வந்தபோது 'முட்டாய் வியாபாரியின்' கதை சொன்னாராம். மண்வாசனை மறந்து யதார்த்தங்களுக்குத் தூரமாகிப் போனவர்களுக்கு இப்படி கதைகளைச் சொல்லித்தான் உண்மையை கற்றுக் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருந்திருக்கிறார்.

மேல் நாட்டுக் குளிரில், புலிக் காய்ச்சலில் போர்த்திப்படுக்கும் இவர்களுக்கு ஜனநாயகம் பற்றியும், மக்களின் அவலம் பற்றியும் போதிக்க நினைத்தது தவறுதான்.

இலங்கைப் பாராளு மன்றத்தில் தனி ஒரு ஆளாக நின்றுகொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எதைத் தமிழ் மக்களுக்குச் செய்ய முடியும் என்று கேட்டு தன் அறியாமையை வெளிப்படுத்தியிருக்கிறார்.

தனி அமைச்சராக இருந்து டக்ளஸ் தேவானந்தா அவர்கள், தேசிய பணியையும், புலிகளால் பாதை மூடப்பட்டு யாழ். மக்கள் பட்டினி கிடக்கும்படியான நிலை உருவாக்கப்பட்டபோது, ஏனைய கூட்டமைப்பு எம்.பி.க் களெல்லாம் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும்போதும், கடல்வழியாக பொருட்கள் கொண்டு வந்தால் தாக்குவோம் என புலிகள் எச்சரித்தபோதும், அரசை வற்புறுத்தி உணவுப் பொருட்கள் கொண்டு போகச் செய்ததும், அதைத் தானே நேரில் சென்று அவதானித்ததும் வரலாறு.

மறுபக்கமாக இந்தியாவுடன் கதைத்து இந்தியா வில் இருந்து பொருட்களை கொண்டு வந்து யாழ்ப்பாணத்தில் இறக்கியதும் உலகம் அறிந்தது. இன்று யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடுகள் எல்லாமே கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. பசி பட்டினியால் ஒரு மரணம்கூட நிகழவில்லை என்பதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அயராத உழைப்புதான் பெரும் காரணம்.

சரி தனியாளாக அமைச்சர் டக்ளஸ் செய்த பணிகள் என்ன என்ற பட்டியல் ஒரு பக்கம் இருக்கட்டும், கூட்டமாக இருக்கும் கூட்டமைப்பு எம்.பி.க்கள் இதுவரை செய்தது என்ன? அவர்களின் மாதாந்த அபிவிருத்தி நிதிக்கு என்ன நடக்கிறது? மாதாந்தம் புலிகளுக்கு வரி கட்டி வாழ்க்கை நடத்ததும் உங்களுக்கு அவர்களின் கைக்கூலிகளிடம் கணக்கு வழக்குகளைக் கேட்க அதிகாரம் இல்லை என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்.

அமைச்சர் டக்ளஸ் மட்டும்தான் உண்மையான மக்களின் வாக்குகளை நியாயமாகப் பெற்றவர் என்பதும், ஏனையவர்கள் எப்படி எம்.பி.யானார்கள், அவர்களுக்குப் புலிகள் எந்தெந்த வகையில் வாக்குப் போட்டார்கள் என்பதையும் 2004ஆம் ஆண்டு தேர்தல் முடிவு குறித்து ஐரோப்பிய தேர்தல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கண்காணிப்பு அமைப்பு வெளியிட்ட அறிக்கையைப் படித்தால் தெரிந்திருக்கும்.

மாற்றுக் குரல்களாக, ஜனநாயக வழிகாட்டியாக பணியாற்றும் மக்களின் நண்பர்களைக் கொன்று குவித்து குருதி வடியும் பற்களோடு திரியும் புலிகளின் இனத்துரோகங்களை வெளிநாட்டில் இருந்து கொண்டே நெஞ்சு நிமிர்த்திப் பேசாத கொன்ஸ்ரன்ரைன் போன்றவர்கள், சொந்த மண்ணில், சொந்த மக்களுடன் தோழர்களின் உயிர்களைப் புலிகள் பலி எடுத்தபோதும் மரணங்களைச் சுமந்துகொண்டு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் பற்றி கருத்துச் சொல்வது அபத்தம்.

அரசுடன் இணைந்து கொண்டு மனித உரிமை மீறல்களைச் செய்ய வேண்டிய தேவை அமைச்சர் டக்ளஸின் கட்சிக்கு இல்லை. அத்தகைய மக்கள் விரோத, மனித உரிமை விரோத வேலைகளைச் செய்யப் புலிகள் இருக்கிறார்கள். அமைச்சர் டகளஸ் மீது நாட்டிலேயே இவ்வாறான சேறு பூச புறப்பட்ட பலபேர், உண்மைகள் வெளுத்துப் போனதால் தங்கள் முகங்களில் கரி பூசிக் கொண்டு திரிகிறார்கள்.

தமிழ் மக்கள் துயரப்படுகிறார்கள் என்பதை கொன்ஸ்ரன்ரைன் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நாங்களும் அதே மக்களுடன்தான் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். மக்கள் மீதான துன்பங்களை வரவேற்கவும் இல்லை. அதைக் கண்டு மௌனம் சாதிக்கவும் இல்லை. அதை எதிர்த்து அறிக்கை விடுவதை விடவும் உரியவர்களிடம் எடுத்துச் சொல்லி கட்டுப்படுத்தி வருவதால்தான் நெருக்கடிகள் குறைந்துள்ளது. குறைப்பதற்கும், தடுப்பதற்கும் ஒரு பக்கம் முயற்சிக்கும்போது, அதை அதிகரிக்க வும், மக்களைத் துன்புறுத்தவும் கங்கணம் கட்டிக் கொண்டு புலிகள் நடத்தும் வன்முறைகளை எப்படிக் கட்டுப்படுத்துவது.

இராணுவ பலாத்காரம் - புலிப் பயங்கரவாதம் நடுவில் மக்கள் இரண்டையும் தடுத்து உயிர் வாழ வேண்டும் என்பது கொன்ஸ்ரன்ரைனின் கோமாளிக்கூத்து. ஏன் புலிகளை நோக்கி பயங்கரவாதத்தையும், சகோதரப்ப படுகொலை களையும் நிறுத்தச் சொல்லிக் கேட்க முடியாது. அப்படிக் கேட்டால் லண்டனிலும் பயங்கரவாதம் கதவு தட்டும் என்ற பயமாக இருக்கலாம். தனியே புலி எதிர்ப்பு மட்டும் ஜனநாயகச் செயற்பாடு அல்ல என்பது சரிதான். மக்களுக்கு சாப்பாடு கொடுப்பதும் அவர்களின் பயணத்துக்கு உதவுவ தும், அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களைக் கொடுப்பதும் இன்று புலிகளுக்குப் பிடிக்காத மக்கள் பணிதான். ஆகவே இதையெல்லாம் புலி எதிர்ப்பு என்று எந்த அடிப்படையில் கொன்ஸ்ரன்ரைன் பார்த்தார் என்பது புதிராக இருக்கிறது.

இறுதியாக புலிகள் தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாகவும் மற்றவர்களெல்லாம் அரச கதிரைகளுக்கு அடிபுடிபட்டுமே இருந்து விட்டுப் போக வேண்டும் என்ற கொன்ஸ்ரன்ரைனின் கருத்தை ஆராய்ந்து பார்க்கின்றபோது புலிகளின் ஏகபோக, அதாவது ஜனநாயக மறுப்பை ஏற்றுக் கொள்ளும் இவருக்கெல்லாம் ஜனநாயகம் பற்றியும் ஜனநாயகப் பணியாளர்கள் பற்றியும் கதைக்கவே அருகதை இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. மறுபுறத்தில் புலிகளுக்கு அரச கதிரைகள் மேல் விருப்பம் வந்துதான் கூட்டமைப்பை நியமித்து கொள்கை பரப்பித் திரிகிறார்கள் என்பதை கொன்ஸ்ரன்ரைன் இன்னும் ஆழமாகத் தெரிந்து கொள்வது அவசியமானது என்பதை நட்போடு ஏற்றுக் கொண்டால் நல்லது. ☑

## எம் வண்ணனுக்கு கொன்ஸ்ரன்ரைன் பதில்

தேசம் சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட எனது கட்டுரைக்கு பதிலளித்து 03 யூலை 07ல் ஈபிடிபி கட்சியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியாகிய கட்டுரை மிகவும் பொருத்தமற்றது. (மேலுள்ள அக்கட்டுரையில் நாகரீகம் கருதி சில வார்த்தைப் பிரயோகங்கள் மாற்றப்பட்டுள்ளது.) இப்பதிலை எழுதியுள்ள எம் வண்ணன் ஈபிடிபி மீதான என் முக்கிய விமர்சனத்தை உள்வாங்கத் தவறி உள்ளார். ஈழத்தமிழர் அரசியலில் புலிகள் இன்று ஒரு பாரிய அரசியல், இராணுவ சக்தியாக இருக்கும் போது புலி எதிர்ப்பு ஜனநாயகக் குழுக்கள் ஆயிரம் பிரிவுகளாக உள்ள பரிதாப நிலைதான் எனது கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அதுமட்டுமல்ல புலி எதிர்ப்புவாதம் மட்டும் தமிழ் மக்களுக்கு எந்த விடுதலையையும் பெற்றுத் தராது. அதற்கும் மேலாக புலிகளுக்கும் மேலான ஒரு பாஸிச, இனவாத அமைபுத்தான் சிங்கள ஆட்சியாளர்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

மேற்குறிப்பிட்ட விமர்சனங்களுக்கு பதிலை முன் வைக்காது “வெளிநாடுகளில் பத்திரிகை நடாதத்தி வயிறு வளர்க்கிறார்கள்”, “பிச்சைக்காரன் சக்தி எடுப்பது போல்”, “பன்றிதாண்டா கூட்டமா வரும் (புலி மன்னிக்க வேண்டும்) சிங்கம் சிங்கிளாத்தான் வரும்” என்றெல்லாம் ஈபிடிபி விவாதிப்பது அவர்களுக்கு ஆரோக்கியமானதல்ல. எது எப்படியோ புலிகளின் பதிலைவிட ஈபிடிபியின் பதில் தற்போது தாங்கிக் கொள்ள முடிகிறது. இது தமிழ் ஜனநாயகத்திற்குக் கிடைத்த ‘புளுத்த’ வெற்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்

2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX

## காயத்திரி அம்மன் வழிபாடு

காயத்திரி யாக வழிபாடு

ஞாயிற்று கிழமைகளில் **நவம்பர் 11, டிசம்பர் 30**

காலை 10 மணிக்கு விசேட அபிஷேகத்தைத் தொடர்ந்து விசேட பூசை

108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.

## சண்டிஹோமம்

**சண்டிஹோமம் 04 நவம்பர் ஞாயிற்றுக்கிழமை காலை 7:00 மணி முதல் பிள்ளையார் பட்டி டாக்டர் பிச்சைக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.**

**மகாகணபதி ஹோமம் சங்கப்பம் 02 நவம்பர் காலை 9:00 மணிமுதல்**

**துர்க்கா லட்சுமி, சரஸ்வதி, ராஜமாதாங்கி, புவுனேஸ்வரி, ராஜராஜேஸ்வரி முதலிய சாக்த தெய்வங்களை வேண்டி மார்க்கண்டேய புராணத்தில் போற்றப்படுகின்ற தேவி மஹாத்மிய பாராயத்துடன்**

## சண்டிஹோமம்

**நடைபெற தேவியருள் கிடைத்துள்ளது. கல்விப்பேறு, சந்தான விருத்தி முதலிய பலன்களைத் தரவல்ல இவ்வழிபாட்டில் கலந்து சக்தியின் திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.**

**குமாரி பூஜையும் சுமங்கலி பூஜையும் இடம்பெறும்.**

**மங்கள நிகழ்ச்சிகளுக்கு**
**மேளம் நாதஸ்வரம்**
**ஏற்பாடு செய்து தரப்படும்.**

தொடர்பு களுக்கு:

07956 919 511, 07961 158 453

2 - 4 Bedford Road,
Walthamstow, London E174PX

**Tel : 020 8527 3819**

www.tamilarangam.net















வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்